1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
Tele{grams: "CATHOLIC PRESS", JAFFNA.
phone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

81-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1956-ம் ஆண்டு ஆனி மாதம் 21-ந் திகதி வியாழக்கிழமை — பிறிசதம் 10 | 24-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### குருத்துவ வெள்ளியூபிலிவிழா

தற்போது யாழ்ப்பாணம், சந்தியோகுமையோர்கோவில் கட்டளைக்குரவராய் இருந்துவருகிறவரானவண. ஈ. பொமிக்கோசுவாமியவர்கள் தமது குருத்துவவெள்ளியூபிலிவிழாவை வருகிற ஆடி மாதம் 2-ந்திகதியாகிய மருதமடுச் செபமாலைநாயகியின் திருநாளன்று கண்டுகளிக்க விருக்கிறாரென்னும் சுபசெய்தியானது அவரதுஞான மக்களுக்கும், மற்றும் அன்பர்களுக்கும் ஓர்மனோகர செய்தியாகுமென்று சொல்லவேண்டியதில்லை.

### சத்திரவைத்திய நோயாளிகள்

கொழும்புநகரிலுள்ள ஆஸ்பத்திரிகளிலே 4,500 நோயாளிகள் சத்திரவைத்திய சிகிச்சையை எதிர்பார்த்துத் தங்கள்முறை எப்போது வருமோஎன்று அங்கலாய்த்துக்கொண்டு இருக்கின்றார்கள். தற்போது சத்திரசிகிச்சைகள் நடைபெற்றுவரும் விகிதத்தைக் கவனிக்குமிடத்து, இவர்களுக்கெல்லாம் சத்திரவைத்திய சிகிச்சை செய்துமுடியக் குறைந்தபட்சம் மூன்று வருடங்களாவது செல்லுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதனால் இப்போது தினமும் நடைபெற்றுவரும் சத்திரசிகிச்சைகளின் தொகையை அதிகரிக்கச்செய்யுமாறு சுகாதார மந்திரிகாரியாலயம் வேண்டியவழிவகைகளைச் சித்தஞ்செய்வதிலே கரிசனையெடுத்து வருகின்றது.

### கொலைகளின் பெருக்கம்

இலங்கையிலே நாள்ஒன்றுக்குச் சராசரிவீதமாக ஒரு கொலையாவது நடவாதநாள் இல்லையெனலாம். இந்த ஆனிமாதத்திலே சென்ற 17-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை நடுச்சாமம் வரையில் 24 கொலைகள் நடந்திருப்பதைக் கவனிக்குமிடத்துச் சிலதினங்களில் இருகொலைகளும் நடைபெறுகின்றன என்பது தெளிவாகின்றது. இவ்வருடத்தின் முதல் 68 நாட்களிலும் 217 கொலைகள் நடந்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருப்பதும் இதற்கோர்சான்றாகும். போதாக்குறைக்குக் கார், லொறி, பஸ், றெயில்விபத்துகளாலும் அதிக மரணங்கள் இன்னுமே ஏற்பட்டுவருகின்றன. சிலாபத்திலே சென்றஞாயிற்றுக்கிழமை தெதுறுஓயாவில் நீராடுவதற்காக மூவர் ஓர்காரிற்சென்றபோது, கார் மரம்ஒன்றில் மோதிக் கவிழ்ந்தமையால் மூவருள்ளும் ஜெய்னுதீன் அவ்விடத்திலேயே மரணமடைய, ஏனைய இருவரும், கார்ச் சாரதியும் காயமடைந்து சிலாப ஆஸ்பத்திரி கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டார்கள்.

### உணவுப்பொருட்களின் விலையேற்றம்

கொழும்பிலும், ஏனையவிடங்களிலும் உணவுப்பொருட்கள் வெகுவாக விலையேறியிருக்கின்றன; உருளைக்கிழங்கு, வெங்காயம், பருப்பு, கருவாடு, காய்கறிகள் தொழிலாளருக்கும், நடுத்தரவகுப்பினருக்கும் ஆடம்பரவாழ்க்கைக்குரிய பொருட்களாகி விட்டனவென்று முறையீடுசெய்து அவற்றின் விலையை உடனேதானே குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு பாராளுமன்றப் பிரதிநிதிகள் அநேகர் உணவு — கமத்தொழில் மந்திரியாரைக் கேட்டிருக்கின்றார்கள். கடந்தஇருமாதங்களுக்கிடையிலே உணவுப்பொருட்களின்விலை உச்சிமட்டாக ஏறியிருக்கிறதென்றும், கொழும்பிலும், வெளியிடங்களிலும் உருளைக்கிழங்கு அநேக ஐக்கிய பண்டகசாலைகளில் கிடைப்பதாயில்லையென்றும், இதன் விலை றாத்தல் 30 சதத்திலிருந்து 62 சதமாக விலையேறியிருக்கிறதென்றும் அவர்களில்ஒருவர் முறையீடுசெய்திருக்கின்றார்.

### போஸ்ற்மாஸ்றரைக் கொலைசெய்தவன்

மாதன்கடவளைப் போஸ்ற்மாஸ்றரான திரு. ரி. தம்பையா அவர்களைக் கொலைசெய்தானென்று குற்றஞ்சாட்டியக்கடயாஎன்பவன்மீது தொடரப்பட்டிருந்த வழக்கானது குருநாகல்சுப்பிறீங்கோட்டிலே அசைஸ்கம்மிஷனர் திரு. ஜி. எம். டி சில்வா அவர்களால் ஒன்பதுதினங்களாக விசாரணைசெய்யப்பெற்று, எதிரிகொலைக்குற்றவாளியாகிச் சென்ற வெள்ளிக்கிழமை மரணதண்டனை விதிக்கப்பட்டனன். அதேஐந்து குற்றச்சாட்டுகளின்பேரில் யக்கடயாவுடன் கைதுசெய்து வழக்குத்தொடரப்பட்டிருந்த எம். என். வில்லியம், ஜி. எம். கபுறுஹாமிஎனும் இருவரும் சுத்தவாளிகளாகி விடுதலையடைந்தார்கள். மரணதண்டனை விதிக்கப்பட்ட யக்கடயாஎன்பவன் மற்றும் இருகுற்றச்சாட்டுகளில் குற்றவாளியாகித் தனித்தனி பத்துவருடச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டிருக்கிறான்.

### மரத்துடன்மோதிய பஸ்

கொழும்பிலிருந்து சென்றஞாயிற்றுக்கிழமைகாலை கொஹுவெலையை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ்

## தமிழும் சிங்களமும்

பிரதமர் பண்டாரநாயகா தாம் தொடுத்த "சிங்களம் மட்டுமே" போரில் முதல்வெற்றியை அடைந்துவிட்டார். அவரதுசட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறிவிட்டது. அவரதுகட்சியே பெரும்பான்மைக்கட்சி. யு.என்.பி. கட்சியும் அவரை ஆதரித்தபொழுது சட்டம் நிறைவேறுமஎன்பதை ஒரு குழந்தைதானும்அறியும். இந்தவெற்றி உண்மையில் சிங்களமொழியை அவர் எதிர்பார்க்கிறபடி அரியாசனத்தில் வைக்கிறதா? வைக்குமா? இதுதான் அடிப்படையானகேள்வி. ஆயுதபலாத்காரம்போல், சட்டரீதியாகப் பெரும்பான்மைப் பலமுடையவர்கள் பலாத்காரமாகச் சட்டம் இயற்றலாம். ஆனால், இந்தவெற்றி உண்மையில் பிரதமர்தலையில் ஒருமணி மகுடத்தை வைக்காது. தமிழைஅழித்துச் சிங்களம் உயரமுடியாது. சிறுபான்மையோரின் திருப்தியும், ஆசியும், அங்கீகாரமுமின்றிப் பிரதமரின் வெற்றி வெறும் கானல்நீர்போல, வெறும் உருவெளித் தோற்றமுமாகத்தான் முடியமுடியும். தமிழரின் ஒத்துழைப்பால் சிங்களம் வளரும், விரிவடையும். தமிழரின் எதிர்ப்பால், அதன் வளர்ச்சி தடைபடும், சுருங்கும். இந்த உண்மையைப் பிரதமர் நன்கறியவேண்டும்.

இன்று திரு. பண்டாரநாயகா இலங்கையில் செய்வதைப் பழையகெய்சர் கால ஜேர்மனியில் பிஸ்மார்க் என்ற மாபெரும் பிரதமர்செய்தார். ஜேர்மனியில் சரிசமானமாக இருந்த ஜேர்மன், போலிஷ் மொழிகளுக்குப்பதில் ஜேர்மன்மொழியொன்றே ஆளும்மொழியாக இருக்கவேண்டுமென்று அவர் தீர்மானித்தார். "கலாசாரப் போர்" புரிந்து, போலிஷ்மொழியை அழித்து, அதுசிதைந்தயுமிடத்தில் ஜேர்மன்மொழியின் மணிக்கூண்டு ஒன்றை எழுப்ப அவர் முனைந்தார். கம்யூனிஸ்த எம். பி. திரு. பீற்றர்கெனமன் அன்றுபாராளுமன்றத்தில் இதுபற்றி விரிவாக எடுத்துரைத்தார். பிஸ்மார்க்கின் முயற்சிதான் போலாந்தை ஜேர்மனியிலிருந்து பிரிந்துநிற்கும்படி செய்தது. போலாந்தை மட்டம்தட்ட ஹிற்லர் அதன் துறைமுகநகரமான டான்சிக்மீதுபடையெடுத்தான். பிரித்தானியும், அமெரிக்காவும் போலாந்தை ஆதரித்து, ஹிற்லர்மீதுபோர்தொடுக்க, இரண்டாவதுஉலகயுத்தம் மூண்டது. அது எப்படிமுடிந்தது? என்பதை யாவரும்அறிவர். ஒருமொழிஇனத்தை மற்றொருமொழியார் இணைத்துக்கொண்டால் வெற்றிபெறலாம். பகைத்து முதலில் வெற்றிபெற்றாலும் அது நீடித்திராது.

ஜனநாயகம்என்பது பெரும்பான்மையோரின் ஆட்சியென்று சிலர்வித்தகம்பேசுகின்றார்கள். ஆனால், ஜனநாயகம் பிறந்து, வளர்ந்து, தவழ்ந்து பெரிய வல்லரசாக உயர்ந்துள்ள பிரித்தானி என்னசெய்கிறது? சைப்பிறஸுக்குச் சுதந்திரம்கொடுக்க அது ஏன்மறுக்கிறது? "சிறுபான்மையோராகச் சைப்பிறஸிலுள்ள துருக்கியரைத் திருப்திசெய்யவேண்டும்; துருக்கியரைத் திருப்திசெய்யாத எந்தச்சமரசத்தையும் பிரித்தானி ஆதரிக்காது" என்கிறார் பிரித்தானியபிரதமர் ஈடன். அல்ஜீரியாவில் சிறுபான்மையினரான பிரான்சுக்காரருக்காகப் பெரும்பான்மையினரான அராபியர்மீது பிரான்ஸ் போர்நடத்துகின்றது. சிறுபான்மைக் கட்சியான மார்ஷல் சியாங்கே ஷேக்கின் ஆட்சிக்காகத் தன்முழுப்பலத்தையும் அமெரிக்காஉபயோகித்துச் செஞ்சீனவை எதிர்க்கிறது. இந்தியாவில் சிறுபான்மையினராயிருந்த முஸ்லீம்களுக்காகப் பிரித்தானி பாகிஸ்தானைப் படைத்தது. சிறுபான்மையினரான யூதர்களையிட்டு மேற்கு ஐரோப்பியநாடுகள் பலஸ்தீனுவுக்காகப் பரிந்துபேசுகின்றன. சிறுபான்மையினரை நசுக்கலாகாது என்கிறது ஐக்கியநாடுகளின் சாசனம். சிங்கள அமிதவாதிகள் இனியாவது சிந்தித்துத் தமிழரின் எதிர்ப்பைச் சமாதானப்படுத்தவேண்டும். திரு. கெனமன் சுட்டிக்காட்டியபடி, இந்தோனேஷியாவில் சிறுபான்மையினரின் மொழிதான் ஆள்கிறது. இந்தியாவில் பிரதேசமொழிகளுடன், பெரும்பான்மையினரின் தனிமொழியான ஹிந்தி சமத்துவம் வகிக்கின்றது.

---

ஒன்று கறுவாத்தோட்டப் பொலிஸ் ஸ்ரேஷனுக்குச்சமீபமாய் ஓர் மரத்துடன் மோதுண்டகாரணமாக அதிலே சென்றபிரயாணிகள் இருபதுபேர் காயமடைந்தனர். இவர்களில் ஏழுபேர் கொழும்புப்பெரியஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். சென்றசனிக்கிழமைபிற்பகல் கல்லோயாப்பகுதியிலிருந்து வெளியேறுவோரை இராணுவ பாதுகாப்புடன் ஏற்றிச்சென்ற பஸ்கள் இரண்டு ஓர்விபத்துக்குள்ளாயின. ஓர் பஸ்ஸில் பிரயாணஞ்செய்த இருபொலிஸ்காரரும், அதிலிருந்த பிரயாணிகள் எட்டுப்பேரும் காயமடைந்தார்கள். பஸ் சேதமடைந்தது. பட்டிருப்பு மக்கள் அவர்களுக்குத துணைபுரிய முன்வந்து வேண்டியஉதவியெல்லாஞ் செய்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருஇருதய அரசாட்சியும் குடும்பங்களும்

இன்றைய நாகரிகஉலகிலே இல்லறம் நடக்கும் மனைகளில் எப்பக்கம் பார்ப்பினும் சினிமாநட்சத்திரங்களின் உருவப்படங்களோ, அன்றேல் அரசியல்ஞானிகளின் அழகுச்சித்திரங்களோ நமதுகண்களைக் கவர்ந்துநிற்கின்றன. ஆயின், அரசர்களுக்கெல்லாம் அரசரும், அழகுபொலியும் அன்பின் அரசருமான திரு இருதயநாதரின் உருவப்படமானது எத்தனை இல்லங்களில் பிரதான இடத்தை வகிக்கின்றது என்று நம்மையேநாம் வினவிக்கொள்ளலாம். காரணம்? இருதயநாதரில் உண்மையானபக்தி நமது ஆத்துமங்களில் சுடர்விட்டு ஒளிராமையே.

யேசுவின் திருஇருதயமானது தான்பட்ட சகலபாடுகளிலும்பார்க்க "ஜெத்செமனிய" தோட்டத்தில்தான் எமது பிரதிஅன்பை நாம அளிக்காமலிருப்பதைநினைந்து பட்டமனேவியாகுலமே அளப்பரியதென அர்ச். மார்க்கரீத் மரியம்மாளுக்குப் பல தடவைகளில் உரைத்திருக்கிறுரென நாம் வாசிக்கின்ேரும். உண்மையில் ஒருவன்படும் சரீரவாதைகளிலும் பார்க்கத் தனது அன்புக்குப் பிரதிஅன்பு செலுத்தப்பெறுதலைத எண்ணிப் படும் இதயதுக்கம் அளவுகடந்ததென்பதை நம்மில் அநேகர் அனுபவவாயிலாக அறிந்திருக்கின்ேரும். "எனக்கு ஆறுதலளிக்க நீ யாவது முன்வருவாயா?" என்று நமது இதயஅன்பர் எமது இருதயங்களின் வாசலில் மாத்திரமல்ல, எம் ஒவ்வொருவர் குடும்பத்தினதும் வாயிற்படியிலும்நின்று அன்புப்பிச்சை கேட்கிறுர். இதைஅளியாதிருக்க எந்தக்கிறீஸ்தவனின்மனம் கல்லிலும்கொடிய கன்னெஞ்சுள்ளதாயிருக்கும்?

இவ்வன்புப் பிச்சையை மனமுவந்து அளிப்பதற்கு யாம் யாதுசெய்யலாம்? தேவஅக்கினிச் சுவாலைவிட்டெரிந்து, நம்மேல்வைத்த அன்பினுல் நமது இல்லங்களில் ஆட்சிபுரியவிருயபும் அரசரை நம்வீடுகளில் ஸ்தாபித்து, நாளாந்தவேலைகளில் அவருக்கு விசேஷஅங்கத்துவம் கொடுத்து, இல்லங்களில் நடைபெறும விசேஷ அலுவல்களில் அவரைத் தலைமையாகவைத்து அவருக்கு எமதுஅன்பைக் காட்டுவோமாக!

முதலில் ஒரு இருதயப்படத்தைப் பூச்சியமான இடத்தில் ஸ்தாபியுங்கள். அதை அலங்கரிப்பதில் அன்புள்ள பெற்றேரே! உங்கள் பிள்ளைகட்கு ஊக்கத்தை அளியுங்கள். பருவமங்கையரே! உங்கள் விரல்களின்நகங்களில் நீங்கள்அவலட்சணமாகப் பூசிக்கொள்ளும் வர்ணங்களைச் சொற்பநாட்களுக்காகிலும் நீக்கிவிட்டு அழகிய பட்டுத்துணிகளினுல் உங்கள் இதயஅன்பரின் பீடத்தை அலங்கரியுங்கள். வாலிபரே! நீங்கள் நாளாந்தம் புகைக்கும் 'சிகரெற்றுக'ளைச் சற்றேகுறைத்து உங்கள்இல்லத்தின் அரசர்க்குச் சிலமெழுகுவர்த்திகளையோ, எண்ணெய்விளக்குகளையோ ஏற்றிவையுங்கள்.

இதைமாத்திரம் செய்துவிட்டு "நீர்தான் எங்கள் அரசரா?" என முண்முடிசூட்டி, மூங்கிற்றடி காதில் கொடுத்துப் பரிகாசம்செய்த யூதரைப் போலநடவாது நாளாந்தம் அப்பீடத்தின் முன்னிலையில் குடும்பஅங்கத்தவர் யாவரும் ஒன்றுகூடித் திருஇருதயத்தை நடுநாயகமாகக்கொண்டு காலைமாலைச்செபம், குடும்பசெபமாலை முதலியவற்றை ஓதிவாருங்கள். இது மாத்திரமல்ல, குடும்பத்தில்நடைபெறும் விசேஷநிகழ்ச்சிகளிலும் அன்பின் அரசர்க்கு முக்கியத்துவம்கொடுத்து மற்றவர்கள்முன்னிலையிலும் அவரை உங்கள் அரசராகப் பிரகடனம்செய்யுங்கள். விசேஷநிகழ்ச்சிகளா? அவை எவைஎனக் கேட்பீர்கள்.

"உங்கள்குடும்பத்தில் ஒருபிள்ளை விவாகம்செய்து புதுத்தம்பதிகளாக உங்கள்மனைகளில் புகுகின்றுர்களா? அல்லது உங்களால் அதிகம்நேசிக்கப்பட்ட ஒருஅன்னை, ஒருகணவன், அன்றேல் ஒருபுதல்வன் மாணத்தினுல் உங்களிடமிருந்து பிரிக்கப்பட்டிருக்கிறுரா? உங்கள்பிள்ளைகளில் ஒருவர் தேவஅழைப்பைப மேற்கொண்டு துறவறம் புகப்போகும்சமயம் உங்கள் மனம் அடக்கமுடியாத துன்பத்தினுல் வேதனையுறுகின்றதா? குடும்பதலைவனே, மூத்தமகனே வீட்டில்சண்டையிட்டு, அமைச்சலின்றி நடக்கிறுரா? இச்சமயங்களிலெல்லாம் சந்தோஷத்தில் பூரணமகிழ்ச்சியும், துன்பத்தில் உண்மைஆறுதலும், அவசரத்தில் உதவியுமான இல்லறஅரசரின் முன்னிலையில் குடும்பமாகஒன்றுசேர்ந்து உங்களைமுழுவதும் அவருக்குஒப்புக்கொடுங்கள்.

இவ்விதம் திருஇருதயமும், உங்கள்குடும்பமும் அந்நியோந்நிய ஐக்கியமாக ஒன்றுபட்டு இருக்குமானுல் உங்கள்குடும்பத்தில் சமாதானம்நிலவும். சந்தோஷம் அதிகரிக்கும். துன்பங்கள் பருதிமுன் பனிபோல் மறையும். சண்டைகள்ஒழியும். சற்புத்திரர்கள் உங்கள்குடும்பமாகிய கொடியில் பூத்துக் காய்த்து உலகின்ஒளிகளாக விளங்குவர். திருஇருதய அரசாட்சியும் எங்கும்பரம்பும்.

திருஇருதயஅரசரே! உம்முடைய இராச்சியம்வருக.

---

● ஓர்குடும்பத்திலே புருஷன் பலவீனமுள்ளவனுயிருக்கும்போது, அவர்களுக்குப் பிறக்குங்குழந்தை அநேகமாக ஓர்ஆண்குழந்தையாய் இருக்குமென்றும், மனைவி பலவீனமுள்ளவளாய் இருக்கும்போது அவர்களுக்குப் பிறக்குங்குழந்தை ஓர்பெணகுழந்தையாய் இருக்குமென்றும் கேம்பிறிட்ஜ் சர்வகலாசாலையில் ஓர் விஞ்ஞானியாக இருந்துவருகின்ற திரு. ஏ. மாக்ஸ்வெல் அவர்கள் தமது ஆராய்ச்சியிலே கண்டறிந்திருக்கின்றுர்

● நாற்பதினுயிரம் ரூஷியஎசன்றுகள் சமீபத்திலே மஸ்கோநகரில் "குருமாராக அபிஷேக"ஞ் செய்யப்பட்டிருக்கிறுர்கள். ஆனுல், இவர்கள் உண்மையான குருக்கள் அல்ல. ஆனுல், திவ்வியபூசை நிறைவேற்றுவது எப்படியென்றும், தேவதிரவியஅனுமானங்களை நிறைவேற்றுவது எப்படியென்றும் பயிற்றப்பட்டு, குருப்பட்டம்ஆதியன பெற்றுக்கொண்டதாகப் பொய்யான அத்தாட்சிப்பத்திரமும் வழங்கப்பட்டிருக்கிறுர்கள்.



# பல தேசங்களில்

## பூசைப்பரிசாரகனும் உரத்துச் செபஞ்செய்தவரும்

சுதந்திர அயர்லாந்தின் தலைப்பட்டணமாகிய டபிளின்நகர கோவிலொன்றிலே அப்போது ஓர்மனிதர் பரிசுத்த தேவதாயாருடன் சம்பாஷித்துக் கொண்டிருப்பவரைப்போல் தனது இருகாங்களையும் நெடுகநீட்டியபடியே அடிக்கடிசென்று மாதாவைநோக்கி உரத்தசப்தமாகச் செபஞ்செய்து கொண்டுவந்தார். அங்ஙனம் இவர் உரத்துச் செபஞ்செய்வதானது சிற்சில தருணங்களிலே அங்கு திவ்வியபூசை நிறைவேற்றும் குருவானவரைக் குழப்பிக்கொண்டு வந்தது. அதனுல் ஓர்தரம் அவர் தமக்குப் பூசைக்குஉதவி செய்துகொண்டிருந்த பாலியனின்பக்கமாகத்திரும்பி: "தனதுகுரலைத் தாழ்த்திச்சொல்லும்படி அந்தமனிதனுக்குச் சொல்" எனக் கூறினுர்.

இந்தமனிதன்தான் மத் தல்போத் என்ற அந்தப்புனித தொழிலாளி. இவருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டுதற்கானவிசாரணை தற்போது ஆலோசனையில் இருந்துவருகிறது. அப்போது சுவாமியாருக்குப் பூசைப்பரிசாரகனுயிருந்த அந்தப்பாலியர் தற்போது சுதந்திரஅயர்லாந்தின் ஜனுதிபதியாய் இருந்துவருகின்ற திரு. சீன் ஓ'கெல்லி அவர்கள்.

சமீபத்திலே டபிளின்நகரில் செல்வி மேரி பேர்செல் அம்மையார் மத் தல்போத்தைப்பற்றி நிகழ்த்திய ஓர்சொற்பொழிவிலே திரு. ஓ'கெல்லிஅவர்கள் தமது பாலியப்பிராய ஞாபகங்களை மீள்வும் ஞாபகத்துக்குக் கொண்டுவரலாயினர். அப்போது இவர் அங்கே பெர்க்கெலிவீதியிலுள்ள கோவிலில் 7 மணிப்பூசைக்குஉதவிசெய்யும் வழக்கமுடையவராயிருந்தார் மத் தல்போத் உட் செல்லும்படியாகப் பல முறைகளில் இவரே கோவிற்கதவுகளைத் திறந்துவிட்டிருந்தார். "அவர் கோவிலுள்நடந்துபோய் வழக்கமாகத் தேவதாயாரின் பீடத்தண்டை செல்வதைக்காணும் வழக்கமுடையவராயிருந்தேன்" என்று இவர் கூறியிருக்கிறுர்.

## பாப்பரசரும் மாஜிஜனுதிபதியும்

அமெரிக்க ஜனுதிபதியாக முன்னர் விளங்கியிருந்த திரு. ஹரி ட்றூமன் அவர்கள் சமீபத்திலே வத்திக்கான் மாளிகைசென்று பரிசுத்த பாப்பரசரைப் பேட்டிகண்டு திரும்பியபின் அப்பேட்டிபற்றி "டெய்லி எக்ஸ்பிறெஸ்" பத்திரிகையில் பின்வருஞ்செய்தியை வெளியிடலானுர்.

"நமது வத்திக்கான் தரிசனையானது மகாதிருப்தி தருவதொன்றுகும். முன்பு நாம் ஒருவருக்கொருவர் கடிதப் போக்குவரத்து நடத்தியமுறையிலே, உலகசமாதானத்துக்கு அத்தியாவசியமான வழிவகைகளைப்பற்றிக் கலந்து விவாதித்துப் 12-ம் பத்திநாத பாப்பரசருடன் ஆச்சரியம்விளைக்கும் சம்பாஷணைஒன்றை நான்நடத்தினேன். இச்சம்பாஷணை முக்கியமாக உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளுடன்மட்டுமே நின்றுவிட்டது.

"அப்போது வத்திக்கானிலே ஜனுதிபதியின் சொந்தப்பிரதிநிதியாகத் திரு. மைறன் ரெய்லர்அவர்கள் இருந்தகாலத்திலே அவருடன் இவ்விஷயமாய் அதிகமான கடிதப்போக்குவரத்துகள் நடத்தியிருக்கிறேன். எனது கடிதங்களுக்குப் பாப்பரசர் அனுப்பிய பதில்கள் உள்ளபடியே அந்தரங்கமாய் இருந்துவருகின்றன.

"அவர் ஓர் சமாதானபுருஷரென்ற வெளிப்படையான நியாயத்தைமுன்னிட்டு, சிலபத்திரிகைகள் அறிக்கையிட்டதாக நான் விளங்குவதுபோல, இல்லை, இந்தப்பேட்டியிலே அணுக்குண்டு ஆயுதங்கள்பற்றி நாம் கலந்து விவாதிக்கவில்லை. இந்தவிஷயத்தை அவர்எடுத்தாளவில்லை. நானும் எடுத்தாளவில்லை. அவர் யுத்த ஆயுதங்களிலே கரிசனை கொண்டவராயில்லை. உலகசமாதானத்தில்மாத்திரமே அவர் கருத்தாயிருந்து வருகிறுர்."

பரிசுத்தஸ்தானத்துக்கும், ஐக்கிய அமெரிக்க தேசத்துக்குமிடையே இராசியஉறவுகள் ஏற்படுத்துவதைத் தாம் என்றைக்குமே ஆதரித்துவந்ததாகத் திரு. ட்றூமன் அவர்கள் றேமைநகரில் தங்கியிருந்தபோது கூறலாயினர். தாம் அமெரிக்கஜனுதிபதியாய் இருந்த காலத்திலே திரு. ட்றூமன் அவர்கள் பரிசுத்தஸ்தானத்தினிடமாக அமெரிக்கஸ்தானிகராய் ஓர்கத்தோலிக்கரல்லாத ஜெனறல் மாக் கிளார்க் அவர்களை நியமனஞ்செய்திருந்தார். இவர் யுத்தகாலத்திலே இத்தாலியில் நிறுத்தப்பட்டிருந்த அமெரிக்கபடைகளை அணிவகுத்து நடத்திவந்தபோது பாப்பரசரை அடிக்கடிபோய்ச் சந்தித்துவந்தார். ஆனுல், இவரின்நியமனமானது பரக்க ஏற்பட்ட எதிர்ப்புக்காரணமாக நீக்கப்படலாயிற்று.

● ஜேர்மனியின் முந்தியதலைப்பட்டணமாகிய பேர்ளின் நகரிலே அப்போது நாஸிகளால் 55 விசாரணைப்பங்குப்பாடசாலைகள் மூடப்படலாயின. அவற்றிலே இதுவரை ஏழுபாடசாலைகள்மாத்திரமே மீளவும் திறக்கப்பட்டுள்ளன. இவற்றில்ஒன்று கம்யூனிஸ்த ஆதிக்கத்திலுள்ள கிழக்குப்பேர்ளினில் உள்ளது.

● தொழிலாளியான அர்ச். சூசையப்பர்போல் உலகில் முதன்முதலாக ஐக்கியஅமெரிக்கதேச லொஸ் ஆஞ்சேல்ஸ் நகரில் ஓர்புதிய விசாரணைப்பங்கு ஆக்கப்படவிருக்கிறது. அவ்வாறு ஆக்கப்படவிருப்பதாய் அந்நகர் அதிமேற்றிராணியாரான கருதினுல் மைக்கின்டையர் தொழிலாளியான அர்ச். சூசையப்பர் திருநாளன்று அறிவித்திருக்கின்றுர்.

● வத்திக்கானிலே சுவிஸ்காவலர் படை வகுக்கப்பெற்ற 450-ம் ஆண்டு நிறைவின் ஞாபகார்த்தமாகப் புதிய மெடல்ஒன்று அடிக்கப்பட்டிருக்கிறது. இதன் ஓர்புறத்திலே பரிசுத்தபாப்பரசரினதும், இந்தப்படை வகுக்கப்பெற்ற காலத்தில் ஆட்சிசெய்த இரண்டாவது ஜூலியஸ் பாப்பானவரினதும் உருவங்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### பாத்திமா யாத்திரைஆரம்பம்

பரிசுத்ததேவதாயார் மூன்று பிள்ளைகளுக்கு ஆறுமுறைகாட்சியளித்த பாத்திமாபதியிலே சென்றமாசம் இவ்வாண்டின் யாத்திரைகால ஆரம்பவைபவத்தின்போது, எட்டுலட்சம்மக்கள் சமுகமாயிருந்ததாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. அப்பதியில்கூடிய இரண்டாவது மிகப்பெருஞ்சனத்திரள் இதுவாகும், இதற்குமுன் 1950-ம்ஆண்டின் யூபிலிவருடத்தின்போது இதேசமயம் பத்துலட்சம்மக்கள் குழுமியிருந்தார்கள். இம்முறை யாத்திரிகர்களிலே அயர்லாந்திலிருந்தும், மற்றும்அநேக ஐரோப்பிய நாடுகளிலிருந்தும், பிறேசிலிலிருந்தும் சென்ற குழுவினர்கள் அடங்கியிருந்தார்கள். காட்சியருளப்பெற்றஇடத்தில் எழுப்பப்பட்டுள்ள சிற்றாலயத்திலிருந்து, மகாலயத்துக்குப் பாத்திமாநாயகியின் திருச்சுரூபத்தை எடுத்துக்கொண்டு நடைபெற்ற ரோச்லைற் சுற்றுப்பிரகாரம் மிகுந்தபக்திப்பரவசம் அளிப்பதாயிருந்தது.

### ஆங்கிலபிரபு மனந்திரும்பினூர்

முன்னர் ஓர் அங்கிளிக்கன் சபைக் கனனுகவிளங்கியிருந்த திரு. எட்வாட் சாள்ஸ் றிச்அவர்கள் மனந்திரும்பிக் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்துகொண்ட எட்டுத்தினங்களின்பின் அவர் தமது மருகரான கிறெய்க்மைல் பிரபு கத்தோலிக்கதிருச்சபையிலே வண. ஜேம்ஸ் பெவன்சுவாமியாரால் சேர்த்துக் கொள்ளப்பெற்றதைக் கண்டுகொள்ளுமாறு பிரசித்திபெற்ற "லண்டன் ஒறேற்றறி" எனும் சிற்றாலயஞ் செல்லலாயினர். ஏறக்குறைய மூன்றுவருடங்களாக ஓர்கத்தோலிக்க சீமாட்டியாய் இருந்துவருகிற பிரபுவின்பாரியாரும் அச்சிற்றாலயத்தில் தனது தந்தையாருடன் பிரசன்னமாயிருந்தார். பிரபு முதன்நன்மை பெற்றுக்கொண்டதையும் இருவருங்கண்டார்கள். 32 வயதுடையவரான கிறெய்க்மைல்பிரபு இதுவரை தமதுசீவியமுழுவதும் தம்முடைய சபைஒழுங்குகளைச் சரிவரஅனுசரித்துவந்த ஓர்அங்கிளிக்கனுய் இருந்துவந்தார். இவ்வருடம் பாஸ்குத்திருநாள்முடிந்து ஒருவாரத்தின்பின்னரே ஓர்கத்தோலிக்கராவதற்குத் தீர்மானித்தார். தமதுபாரியாரைக் கண்டடையுமுன் சிலவருடங்களாக இவர் கத்தோலிக்கதிருச்சபையின் நிலைமையைப் பரிசீலனைசெய்துவந்து ஓர்தரம் வேண்டாமென்று அதனை உதறித்தள்ளிவிட்டார். ஆனல், விவாகஞ் செய்துகொண்டபின் அவர் மாமனுர்எழுதிய "இங்கிலாந்துச்சபையில் ஞானஅதிகாரம்" எனும்நூலும், அவருடன் நிகழ்த்தியசம்பாஷணைகளும் அங்கிளிக்கன்சபை பாராட்டும்உரிமைகளின் பலவீனத்தை இறுதியாகச் சந்தேகமின்றியே இவர்நம்பும்படி செய்துவிட்டன. தென்னிந்தியசபை விவாதம்சம்பந்தமாய் இங்கிலாந்துசபையிலுள்ள பெருங்கலக்கம்பற்றி உண்டான சஞ்சலமுமே தமது மருகர் கத்தோலிக்கதிருச்சபையில் சேர்ந்துகொள்ளுவதெனத் தீர்மானஞ் செய்வதற்கு வெகுவாக வழிபண்ணியதென இவர்மாமனுர் கூறுகின்றூர்.

### பாப்பானவருக்கு முத். பட்டம்

11-வது இன்னெசெந் பாப்பானவருக்கு முத்திப்பேறுபெற்ற பட்டம் அருளும்திருவைபவம் வருகிறஐப்பசிமாதம் 7-ந் திகதி ஞாயிறுவாரம் நடந்தேறுமெனத் தற்போது எதிர்பார்க்கப்படுகிறது. இத்திருப்பட்டம் இவருக்கு அருளும்விஷயமாய் எடுத்தாளப்பட்ட இருபுதுமைகளும் சமீபத்திலே வத்திக்கானில் பரிசுத்த பிதாவின்சமுகத்தில் திருச்சடங்காசார திருச்சங்கத்தைச்சேர்ந்த கருதினல்மார், ஆலோசகர்கள், குருசிரேஷ்டர்களான அதிகாரிகளின்கூட்டம்ஒன்றில் கலந்து விவாதிக்கப்படலாயின. அதன்மேல் இருபுதுமைகளுக்கும்சாதகமாக அவர்களின் தீர்மானத்தைப் பாப்பரசர் அங்கீகரித்து ஆஞ்ஞாபத்திரம்வெளியிட அதிகாரமளித்தார். 11-வது இன்னெசெந் பாப்பானவர் 1676-ம்ஆண்டு புரட்டாசிமாதம் 21-ந் திகதி பாப்பானவராகத் தெரியப்பெற்று, 1689-ம்ஆண்டு ஆவணிமாதம் 11-ந்திகதிமரணமடைந்தார். இவருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளுதற்கானவிசாரணை 18-ம் நூற்றூண்டின்மத்தியில் ஆரம்பிக்கப்பட்டது.

### பியோசுவாமியாரின் பரவசநிலை

நமதுஆண்டவரின் திருக்காயங்கள்ஐந்தும் தம்மிலே அற்புதவிதமாகப் பதியப்பெற்றுள்ள ஓர் இத்தாலியகுரவரும், கப்புச்சின் சபையைச்சேர்ந்தவருமான வண. பியோசுவாமியார் அங்கு சமீபத்தில் சான் ஜியோவான்னி றெரொண்டோநகரில் திவ்வியபூசை நிறைவேற்றியபோதும், பிந்த 300 படுக்கைகளைக் கொண்ட புதியஆஸ்பத்திரிஒன்றின் திறப்புவிழாவில்நடைபெற்ற அர்ப்பண வைபவத்தின்போதும் பரவசமுற்றவராய்க் காட்சியளித்தனர். இந்தஆஸ்பத்திரி கப்புச்சின்சபையாரால் நடத்தப்படவில்லையாயினும் அது வண. பியோசுவாமியாரின் தூண்டுதலாலும், முயற்சியாலுமே கட்டப்படலாயிற்று. அநேகவருடங்களின்பின் அவர் பகிரங்கமாகநிகழ்த்தியபேச்சிலே, அதனைக் கட்டிமுடிக்கக்கூடியதாய் உலகமுழுவதிலுமிருந்து நன்கொடைகள் அனுப்பியவர்களுக்கெல்லாம் நன்றிதெரிவித்தார். அர்ப்பண வைபவத்தின்போது 15,000 பேருக்கு மேற்பட்டமக்கள் சமுகமாயிருந்தார்கள். இவர்களிலே பொலொஞ்ஞா, மிலான்நகர்களின் கருதினல்மாரும், இத்தாலியபிரதமர் சிஞ்ஞோர் செக்னிஅவர்களும் அடங்குவார்கள். இந்தஆஸ்பத்திரி இத்தாலியின் கிழக்குமெதித்தரேனிய குடாக்கடற்பகுதியிலே மிகப்பெரியதும், வண. பியோசுவாமியார் சஞ்சரிக்கும் ஆச்சிரமத்திலிருந்து சிலநூறுஅடிதூரத்தில் உள்ளதுமாகும்.

### மனந்திரும்பிய அமெரிக்கர்

ஐக்கிய அமெரிக்கதேசத்திலும், அதனைச்சேர்ந்த அலஸ்காநாட்டிலும், ஹவாய்தீவுகளிலும் சென்ற 1955-ம்ஆண்டிலே 1,39,333 பேர் மனந்திரும்பிக் கத்தோலிக்கதிருமறையில் சேர்ந்திருப்பதாகச் சமீபத்திலே நியூயோக்நகரில் வெளிவந்துள்ள அதிகாரபூர்வமான "கதலிக் டிறெக்றறி" தெரிவிக்கின்றது. இத்தொகை முந்திய வருடத்தில் மனந்திரும்பியவர்கள் தொகையைக்காட்டிலும் 2,023 பேரை அதிகமாகக்கொண்டது. இவர்களுடன் கடந்தபத்துவருடங்களிலும் அங்கே மனந்திரும்பிக் கத்தோலிக்கரானேர்தொகை 12 லட்சத்து 11ஆயிரத்து 957பேராகும். தற்போது ஐக்கியஅமெரிக்கதேசத்தில் 3கோடியே 35லட்சத்து 74ஆயிரத்து 17கத்தோலிக்கரும், அலஸ்காவிலும், ஹவாய்தீவுகளிலும் 1,77,370 கத்தோலிக்கரும் இருந்துவருகின்றூர்கள்.

### மனந்திரும்பிய பாதிரியார்

இங்கிலாந்திலே பீற்றர்பரோ அங்கிளிக்கன்சபை மேற்றிராசனத்திலே முன்னர் சமயகல்வித்தலைவராய் இருந்தவரும், பின்னர் அம்மேற்றிராசனத்தின் ஆசனக்கோவிலிலே கனன்வாசஸ்தராய் இருந்துவந்தவருமான கனம். கனன் எட்வாட் சாள்ஸ் றிச்அவர்கள் மனந்திரும்பி லண்டன்நகரில் பாம்வீதியிலுள்ள யேசுசபைக் கோவிலிலே அன்றுசனிக்கிழமை கத்தோலிக்க திருச்சபையில் சேர்த்துக்கொள்ளப் பெற்றனர். தற்போது 60 வயதுடையவரான இவர் 35 வருடகாலம் ஓர்அங்கிளிக்கன்சபைப் பாதிரியாராய் இருந்துவந்தார். சமயசம்பந்தமான விஷயங்களில் ஓர்தொகையான புத்தகங்களை இவர்எழுதியிருக்கிறூர். "இங்கிலாந்துச்சபையில் ஞானஅதிகாரம்" என்பது அவர் அதிகம் சமீபகாலத்தில் எழுதிய நூல்களில் ஒன்ருகும். இது 1953-ம்ஆண்டு வெளிவரலாயிற்று. இவர் மூன்றுமாதங்களுக்கு ஒருமுறை வெளியாகும் "சபைப்போதனை" எனும்சஞ்சிகையின் முன்னைநாள் ஆசிரியருமாவர். ஏற்கனவே மனந்திரும்பியுள்ள அன்தியாஎன்ற இவரின் புதல்வி சென்றவருடம் லண்டன் நகரிலே ஸபானிஷ்பிளேஸ் எனுமிடத்திலுள்ள அர்ச். யாகப்பர் கோவிலிலே லோட் கிறெய்க்மைல் பிரபுவைத் திருமணஞ்செய்து கொண்டார்.

### வீயென்னுநகர் அதிமேற்றிராணியார்

ஆஸ்திரியாவின் தலைப்பட்டணமாகிய வீயென்னுநகர் அதிமேற்றிராணியாராய் விளங்கியிருந்து சமீபத்திலேகாலஞ்சென்ற கருதினல் இனிற்சர் ஆண்டவரிடமாக மகாவந். பிரான்ஸ் கோனிக்மேற்றிராணியார் நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றூர். ஓர்ஆஸ்திரியராக இருந்தபோதிலும் இவர்ஆங்கிலபாஷையை அதிகம் வாக்குவன்மையுடன் பேசக்கூடியவர். ருஷியபாஷைஉட்பட அதிகமான ஐரோப்பியபாஷைகளையும் பேசுகின்றூர். 49 வயதுடையவரான இவர் ஓர்வேதாகம பண்டிதருமாவர். கீழைத்தேசபாஷைகளிலும், இலக்கியங்களிலும் தத்துவமுடையவர். சால்ஸ்பேர்க்நகரிலே ஓர் ஆத்மீக வேதசாஸ்திர பேராசிரியராய்இருந்துவந்தபின் இருவருடங்களின்முன்னரே இவர் ஓர்மேற்றிராணியாராகநியமனம்பெற்றூர்.

### விடுதலையடைந்த இருகுருமார்

சீனதேச ஷாங்காய்நகர சிறைச்சாலையிலே 38 வயதுடைய வண. ஜோண்வில்லியம் கிளிவோட், 51 வயதுடைய வண. தோமஸ் லெயோனுட் பிலிப்ஸ்எனும்அமெரிக்கயேசுசபைக் குருமார்இருவர் தங்களுக்குவிதிக்கப்பட்ட மூன்றுவருட சிறைத்தண்டனைக்குள்ளாயிருந்தபின் விடுதலைசெய்யப்பட்டிருக்கிறூர்களெனப் பீக்கிங்நகரிலிருந்து சென்றசெவ்வாய்க்கிழமை தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. இவ்விருவரும் 1953-ம்ஆண்டு ஆனிமாதம் 15-ந்திகதியன்று ஷாங்காய்நகரில் கைதுசெய்யப்பெற்று மூன்றுவருட சிறைத்தண்டனைவிதிக்கப்பட்ட குருமார்குழுவில் அடங்கியிருந்தனர். இவர்களில் ஐக்கிய அமெரிக்கதேச சான்பிரான்சிஸ்கோநகரில்தமதுதாயையும், சகோதரர் ஒருவரையும் சீவந்தராகக் கொண்டுள்ள வண. கிளிவோட் சுவாமியார் 1946-ம்ஆண்டுமுதல் சீனவில் தொண்டாற்றிவந்துள்ளவர். பீக்கிங்நகரிலே சீனப்பாஷையைப் படித்துக்கொண்டபின் ஷாங்காய்நகர்சென்று அங்கு 1950-ம் ஆண்டு ஓர்சீனமேற்றிராணியாரால் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றிருந்தார். வண. பிலிப்ஸ் சுவாமியார் 1928-ம்ஆண்டு முதலாவது அமெரிக்கமிஷன் குழுவுடன் சீனவுக்குச்சென்றிருந்தார். இவரும் ஷாங்காய்நகரிலேயே குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றூர். இரண்டாவது உலகயுத்தத்திலே ஷாங்காய்நகரிலிருந்த ஜப்பானியரால் சிறைபிடித்துக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆனி மாதம்

**போதுக்கருத்து:** யேசுவின் திருஇருதயத்திருநாளின் நூற்றாண்டு விழாவானது திருஇருதயப் பக்தியை ஓங்கிவளரச் செய்யவேண்டுமென வேண்டிக்கொள்வது.

**மிஷன் கருத்து:** இந்தியா, பாகிஸ்தான், பர்மா, இலங்கை, இந்தோனீசியாமுதலாம் நாடுகளிலே குருத்துவஅழைத்தல் பெருகும்படியாய் ஊக்கமாக மன்றாடிக்கொள்வது.

சத்தியவேத
# பாதுகாவலன்

1956-ம் ஆண்டு
ஆனிமாதம் 21-ந் திகதி

## "சிங்களம் மட்டும்"

சனப்பிரதிநிதிகள் சபையிலே பிரதமர்பண்டாரநாயக கொண்டுவந்த "சிங்களம் மட்டும்" என்ற சட்டம் சென்ற 15-ந்திகதி வெள்ளிக்கிழமைகாலை அவசரம்அவசரமாக அரங்கேற்றப்பட்டுவிட்டது. இந்தச்சட்டத்தைத் தமிழ்ப்பிரதிநிதிகளும், தமிழ்ப்பேசும் பிரதிநிதிகளும், பலசிங்களப்பிரதிநிதிகளும் பலமாக ஆட்சேபித்தார்கள். ஆணித்தரமான பலநியாயங்களையும் எடுத்துக்காட்டினார்கள். அரசாங்கமொழியாகச் சிங்களத்தைச் சட்டமூலம் ஆக்குவதாலே அரசாங்கம் ஒருஐக்கிய இலங்கையைக் காணலாமென ஆசிக்கின்றது; ஆனால், அது காணப்போவது ஓர்பிளவுபட்ட இலங்கையைத்தானென்று முன்னெச்சரிக்கை செய்தார்கள். "சிங்களம் மாத்திரமே" என்றசட்டம் அநீதியை அடிப்படையாகக் கொண்டது; இதுநிறைவேறியதும் தமிழர்கள் இப்போது அனுபவித்துவரும் சகலஉரிமைகளையும் துடைத்தெறிந்துவிடும்; நாட்டின் சுதந்திரத்துக்காகத் தோளோடுதோள்நின்று சிங்களவர்களுடன் தமிழர்களும் உழைத்தார்கள்என்பதை மறந்துவிடப்படாது; இலங்கையில் சிங்களவர்கள் . பெரும்பான்மையினராக இருப்பதாலே அவர்களின்மொழியைச் சிறுபான்மையினர் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டுமென்று விவாதிப்பது ஜனநாயகத்துக்கு மாறானது; இந்தச்சட்டம் நாட்டின்ஐக்கியத்தைக் குலைத்தேவிடுமென்றெல்லாம் எத்தனையோகாரணங்களை எடுத்துக்கூறினார்கள். ஆனால், கேடுவரும்பின்னே மதிகெட்டுவரும்முன்னே என்பதை அறியாமையாற்போலும் அவற்றையெல்லாம் நிராகரித்துவிட்டு மக்கள்ஐக்கியமுன்னணி அரசாங்கம் தான்நினைத்ததைச் சாதித்திருக்கின்றது. இந்தச்சட்டத்திற்குச் சார்பாக 66 வாக்குகளும், மாறாக 29 வாக்குகளும் கொடுபட்டபோதிலும் அதற்கு மூன்றிலிருபங்கு வாக்குகள் கிடையாமற்போனமை ஓர் துரதிர்ஷ்டமேயாகும்.

"மொழிப்பிரச்சினையைத் தீர்ப்பதிலே மிகுந்த சாவதானமாய் நடந்துகொள்ளும்படியாக நான் அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறேன்; அங்ஙனம்நடந்துகொள்ளவில்லையாயின் ஈற்றில் கஷ்டப்படவேண்டியவர்கள் சிங்களவராகிய நாங்களே; நான் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் ஓர்அங்கத்தவனாய் இருந்தபோதிலும், பாஷைப்பிரச்சினைவிஷயமாய் அதன் கருத்துகளை நான்ஒப்புக்கொள்ளவில்லை; சிங்களப்பாஷை இலங்கையில் மாத்திரமே பேசப்படுகிறது; சிங்களப்பாஷைக்குரிய தகுதியான ஸ்தானம் அதற்கு வழங்கப்படவில்லையாயின் புத்தசமயம் கஷ்டத்துக்கும், நஷ்டத்துக்குமுள்ளாகுமென்று புத்தபிக்குகள் எண்ணுகின்றார்கள்; ஆனால், நாட்டின்நலனுக்காக ஒருபக்கம் சாய்ந்து வேலைசெய்யும் அரசாங்கம்ஒன்றைக்கொண்டிருப்பது நவமானகாரியமன்று; இங்கே நாட்டைவிட்டு வெளியேற முடியாத தமிழர்களும் இருக்கின்றார்கள்; விரும்பாதமக்கள்மீது பலவந்தமாக ஓர்பாஷையைத்திணிப்பது இயலுந்தரமன்று" என்றுசிங்கள முற்போக்குவாதிகளில் ஒருவரும், —முந்திய பாராளுமன்றத்திலே மத்துகாமப்பிரதிநிதியாய் இருந்தவருமான திரு. வில்மட் பெரேரா அப்போது பகிரங்கமாகக்கூறியிருந்தும், மெல்லமெல்ல என்ற கொள்கையைக் கடைப்பிடிக்குமாறு அரசியல்வாதிகள்பலர் ஆலோசனை கூறியிருந்தும் அவைகளில் ஒன்றுமே புதியஅரசாங்கத்தின் செவிக்கேறவில்லை, ஆமாம்! கெடுகுடி சொற்கேளாது, கொல்லும்நோய் மருந்தைக்கேளாது.

கடைசியாகச் "சிங்களம் மட்டும்" என்றசட்டம் பிரதமர்பண்டாரநாயகாவின் "வாக்குறுதி" யென்ற ஈருந்தவாக்கைப்பெற்று அரங்கேறிவிட்டது. சிறுபான்மையினர் அனாவசியமாகப் பீதிகொள்ளவேண்டாம்; அனைவரையும் திருப்திசெய்ய முயலுவேன்; எந்தச்சிறுபான்மைப் பிரிவினருக்கும் அநீதிசெய்யும்உத்தேசம் கிஞ்சித்தும் எனக்கில்லை; சகலருக்கும் திருப்தியானமுறையில் இந்தப் பிரச்சினையைக் காலக்கிரமத்தில் தீர்த்துவைப்பேன் என்றெல்லாம் பிரதமர் தேன்போல் மொழிந்திருக்கின்றார். முக்கனி, சர்க்கரை போன்று இனிமையாகப் பேசியிருக்கின்றார். அம்மட்டா! கடந்த 2,500 ஆண்டுகளிலும் சிங்களச்சாதியினர் வேறெந்தச்சாதியினருக்கும் அநீதிசெய்யவில்லை; இனிமேலும்செய்யப்போவதில்லை என்றெல்லாம் அவரது சகமந்திரிமாரும் பக்கப்பாட்டுப் பாடுவார் போன்று உச்சிகுளிர, உள்ளங்குளிரப் பேசினின்றார்கள். ஆனால், இவர்களின் வாக்குறுதிகளிலும், பேச்சுகளிலும் தமிழ்மக்கள் நம்பிக்கைவைத்தால் இத்தனைஆட்சேபங்களும், வாக்குவாதங்களும் ஏற்படுமா? "சிங்களம் மட்டும்" சட்டவிஷயமாகச் சனப்பிரதிநிதிகள்சபையிலே வாக்கெடுப்பு நடந்திருக்குமா? ஆனால், ஒன்றுமாத்திரம் நாம்இந்தவேளை சொல்லக்கூடும். அதாவது: இதுபயங்கர கொள்ளைகள், படுகொலைகள், சித்திரவதைகள், இரத்தப்பிரவாகங்கள், எரியூட்டுதல்கள், குழப்பங்கள், எதிரித்தனங்கள், வகுப்புத்துவேஷங்கள், ஆழ்ந்தகவலைகள், அங்கலாய்ப்புகள், அட்டூழியங்கள், அநீதிகள்மத்தியில் அரங்கேறியிருப்பதிலிருந்து தங்கள் எதிர்காலம் எப்படியிருக்குமென்பதைச் சிங்களம்படித்தன்றித் தமிழ்மக்கள் விளங்கிக்கொள்ளமாட்டார்களா?

## குருத்துவ வெள்ளி யூபிலியும் அருட்சூசைமாமுனிவர் அச்சகமும்

தற்போது பருத்தித்துறைக் கட்டளைக்குரவராய் இருந்துவருகிறவரான வண. ஏ. சியேர்ப்கா சுவாமியவர்கள் ஈராறுஆண்டுகளாக எமது அச்சகத்தின் மனேஜராகப் பதவிவகித்திருந்து, இதன் விருத்திக்கும், முன்னேற்றத்துக்குமாக அருந்தொண்டாற்றிவந்துள்ளார். ஆகவே, சென்ற 17-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை சுவாமிகளின் குருத்துவவெள்ளி யூபிலிவிழாக் கொண்டாட்டத்திலே எமது அச்சகத்தில் பணியாற்றிவருகிறவர்களும் சிறப்பாகக்கலந்து, அவருக்குத் தங்கள் அன்பையும், நன்றியறிதலையும் காண்பித்து யூபிலிச் சோபனங்கூறினார்கள்.

அன்றுசாயந்தரம் விசேஷ பஸ் வண்டிஒன்றிலே அனைவரும் பருத்தித்துறை அர்ச். தொம்மைஅப்போஸ்தலர் ஆலயத்தையடைந்து, யூபிலிநாயகர் குருமனையிலிருந்து பல குருமார்சமேதராய் அழகேமயமாகக் காட்சியளித்துநின்ற கன்னிகாமடப்பாடசாலைக்கு ஆடம்பர வரிசையுடன் அழைத்துக்கொண்டு போகப்பெற்ற ஊர்வலத்தில் பங்குபற்றிப் பாடசாலைமண்டபம்போய்ச் சேர்ந்தபின் அங்கு பரிமளிப்பாக நடந்தேறிய விழாக்கொண்டாட்டத்திலே தங்களுக்குக் குறிக்கப்பட்ட நேரம் வந்ததும் அச்சகப் போர்மன் திரு. ஜே. நிக்கலஸ்அவர்கள் சுவாமிகளுக்கு நறுமணப் புஷ்பாரஞ் சூட்டினர். யாவர்உள்ளங்களையும் கவரக்கூடியதன்மையிலே யூபிலிப்பாக்கள் படிக்கப்பட்டன. "பாதுகாவலன்" பத்திரிகாசிரியர் முன்சென்று வெள்ளிஅட்சரங்களில் பொறிக்கப்பெற்றதும், சித்திரவேலைப்பாடு அமைந்ததும், சுவாமிகளின் சேவைநலம் பாராட்டுவதுமான யூபிலிச் சோபன பத்திரம்ஒன்று படித்துக் கொடுத்ததும் அன்பளிப்புகள் சந்மானிக்கப்பட்டன.



சுவாமியவர்கள் அளித்தபதிலிலே, பன்னிருவருடங்களை — அதாவது, தமது குருத்துவசேவையின் அரைவாசிக்காலத்தை அர்ப்பணஞ்செய்த அச்சகத்தைச்சேர்ந்த தமதுமக்கள் யூபிலிவிழாவிற் கலந்துகொண்டதற்காகவும், அவர்களின் அன்பளிப்புகளுக்காகவும் நன்றிகூறினார். தாம் குருப்பட்டம்பெற்றபின் தமது சுவநாட்டில் ஓர்தரமாவது கால்வைத்துத் திவ்வியபூசை நிறைவேற்றும் பாக்கியம் தமக்குக் கிடைக்கவில்லையேஎன்று வழமையான தமது செல்லமொழியில் கூறியதுதான், விம்மல்பொருமலுடன் பொங்கியெழுந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, அப்பால் தமதுஅருமைத் தாய்தந்தையரைப்பற்றிப் பேசத்தொடங்கியதும் எழுந்தவிம்மலையும், பொருமலையும், அழுகையையும் அடக்கிக்கொள்ளவாற்றாது அந்தப்படியே ஆசனத்தில் சாய்ந்துவிட்டார். அப்போது அங்கு சமுகமாயிருந்தாரெல்லாம் "பெற்றதாயும், பிறந்தபொன்னாடும்......" என்பதை நினைவுகூர்ந்து அவருடன் கண்ணீர் உகுத்துநின்றார்கள்.

விழாமுடிவிலே சகலருக்கும் பரிமளிப்பான ஓர் சிற்றுண்டி உபசரணை அளிக்கப்படலாயிற்று. அதற்குத் தமது திருச்சமுகமளித்துத் தலைமைதாங்கிய மகாவந். நம்மேற்றிராணியாண்டவர்அவர்கள் எழுந்து யூபிலிநாயகர் கடந்த 28 ஆண்டுகளாக எம்மத்தியில் இருந்துவருகிறாரென்றும், தமது சீரியகுணங்களாலும், சிறந்த சாதுரியத்தாலும் சென்றவிடமெல்லாம் அருந்தொண்டாற்றி வந்திருக்கிறாரென்றும், சஞ்சூசைமாமுனிவர் அச்சகத்தைச் சேர்ந்தமக்கள் இங்குதிரளாகச் சமுகமளித்திருப்பதே அவரின் சேவைகளுக்குத் தகுந்தசான்றெனவும் பேசிச் சுவாமிகளுக்குச் சோபனங்கூறிநின்றார். ஈற்றில் சுவாமிகளின் ஆசீர்வாதம்பெற்றுக்கொண்டு, மும்மடிச் சோபனங்கள், ஆனந்தகரகோஷங்கள் மத்தியில் யாழ்ப்பாணந் திரும்பினார்கள்.

---

※ கிறீஸ்தவ இளந்தொழிலாளர் (Young Christian Workers) அதற்குரியசபையிலே புதிதாகச்சேரும்போது என்னவார்த்தைப்பாடு கொடுக்கின்றார்கள்?

கிறீஸ்துநாதருக்குப் பிரமாணிக்கமாயிருப்பதாகவும், வேலையிலும், இல்லத்திலும், அயலிலும் அவரின்செல்வாக்கைப் பரப்புவதாகவும் வார்த்தைப்பாடு கொடுக்கிறார்கள்

※ எரிவெள்ளிகள் விழுவதால் வருடமொன்றுக்குப் பூமியில் எவ்வளவு தூசிகள் வந்துசேருகின்றன?

40,000 தொன்நிறையுள்ள தூசிகள் வந்துசேருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்ப்பவதிகளும் சத்துள்ள உணவும்

ஒருதாயின்உடல்நலம் அவள்அருந்தும் ஆகாரத்திலும், ஒருகுழந்தையின் உடல்நலம் அதன்தாயின் பாலிலுமே அதிகமாகத் தங்கியிருக்கின்றன. ஒருதாய் தனதுசிறுபராயமுதல் தனக்குத் தேவையானஅளவுக்குத் தொடர்ச்சியாகச் சத்துள்ளஉணவைஉட்கொண்டு வந்தால், தாய்மைநிலைஅடையும்போது அவள் பூரணவளர்ச்சியால் பொலிவுற்ற சரீரம்உடையவளாகலாம். குழந்தைக்குவேண்டிய சிறந்தஉணவு தாயின் கருப்பையிலிருந்து தொடங்குகிறது. கருப்பகாலத்தில் குழந்தையிடம் ஏற்படும் உடல்வளர்ச்சிவேகத்திற்குப் பிறந்தபின் அதனிடம் உண்டாகும் வளர்ச்சிவேகம் எவ்விதத்திலும் சமமாக மாட்டாது.

### கருப்ப காலம்

கருப்பகாலம் கருவின் வளர்ச்சியோடு சம்பந்தப்படுகிறது. எனவே, அக்காலஉணவு புஷ்டியைக் கொடுக்கக்கூடிய சகலஅம்சங்களிலும் சிறந்திருக்கவேண்டும். கருப்பகாலம் முழுதும் உண்டாகும் கருவளர்ச்சியின்போக்கை ஆராயும்போது கடைசியான பன்னிரு வாரங்களில்தான் கருவளர்ச்சியும், தாயின்நிறைகூடுதலும் தாய்உட்கொள்ளும் ஆகாரங்களினால குறிப்பிடக்கூடிய அளவிற்குப் பாதிக்கப்படுவதாகத் தெரிகிறது. ஆகவே, அக்காலத்தில் அதற்கேற்ற சத்துள்ள ஆகாரங்களைத் தேவையானஅளவுக்கு அருந்திவருதல் வேண்டும்.

கருப்பவதியின் உடலில் புதியசவ்வுகளை உற்பத்தியாக்குவதற்குக் கருப்பதார்த்தமும், கருவின்வளர்ச்சிக்குத் தாதுப்பொருட்களும், கருவின் சாதாரண எலும்பு, பல் வளர்ச்சிக்குச் சுண்ணச்சத்தும், பொஸ்பரஸும், இன்னும் இவைகள் சரியாகச் சீரணிக்கஉதவும் உயிர்ச்சத்து ஏஉம், ஸிஉம், டிஉம் ஏற்றளவு அவளின் ஆகாரத்தில் கலந்திருக்க வேண்டும்.

### போதியநீர் பருகவேண்டும்

ஒருதாய் கருத்தரித்திருக்கும்போது தன்உடலிலுள்ள கழிவுப்பொருட்களுடன் வயிற்றிலிருக்கும் குழந்தையின் கழிவுப்பொருட்களையும் வெளியேற்ற வேண்டியவளாகிறாள். இதற்குஉதவியாகப் போதியளவு பானங்களைச் சரிவரப்பருகவேண்டும். ஒவ்வொருநாளும் குறைந்தபட்சம் எட்டுக் 'கிளாஸ்' ஆறிய சுத்தவெந்நீர் பருகிவரவேண்டும். இதற்குஉகந்தமுறை பால், பழச்சாறு, காய்கறிச்சூப்பு முதலியவைகளுடன் தண்ணீரையும் குடிப்பதாகும். பாலில்உயர்ந்த கருப்பதார்த்தமும், சுண்ணும்புச்சத்தும், உயிர்ச்சத்து ஏஉம், டிஉம் கிடைக்கும். பழச்சாற்றில் உயிர்ச்சத்து ஸிஐப்பெறலாம்.

வழக்கத்திலும் பார்க்க ஒருகருப்பவதி உட்கொள்ளும்உணவு மலச்சிக்கல் உண்டாக்காததாய் அமையவேண்டும். அதிகம் தீட்டப்படாத அரிசையைக் கொண்டு சமைத்தசோற்றுடன் அதிக பழவகைகளையும், மரக்கறிவகைகளை கலந்துசாப்பிடுதல் வேண்டும். இதனால் மலச்சிக்கலை நீக்குவதுடன் உயிர்ச்சத்துக்களையும் பெறலாம்.

### சத்துள்ள உணவு

மாமிசபோசனம் உண்ணுதவர்கள் தங்கள் உணவுடன் அதிகமான பருப்பு வகைகளையும், பாலையும், பாலின்பண்டங்களையும் மற்றவர்களிலும் பார்க்கக்கூடுதலாக உட்கொள்ள வேண்டும். தாய்மாருக்குப் பால்மிகவும் அவசியம். ஏனெனில், அதில் உணவுச்சத்துகள் யாவும் அடங்கியுள்ளன. அதிக வருமானமில்லாத சாதாரண தாய்மாருக்குப் பாலின்விலை துரதிஷ்டவசமாகக் கூடியிருப்பதால் அதைவாங்க இயலாதிருக்கக்கூடும். அவர்களுக்குச் சிகிச்சை நிலையங்களில் இலவசமாகப் பால்மா வழங்கப்படுகிறது. உணவுப்புஷ்டி ஊட்டுவதற்காகச் சிகிச்சை நிலையங்களில் கொடுக்கப்படும் "விற்றமின்" மாத்திரைகள், மீன்எண்ணெய் முதலியன மிகவும் பிரயோசனமுடையனவாகும்.

இவைகளை உணவுப்புஷ்டிக் குறைவினால் நோயுற்றவர்களுக்கு மட்டுமன்றி, மற்றும் தாய்மார்களுக்கும் கொடுக்கவேண்டும். குழந்தைக்குப் பால் கொடுக்கும் தாய்க்கு விசேஷமாக "விற்றமின்" மாத்திரைகள் வேண்டியிருக்கும். இவற்றை உட்கொள்வதற்கேற்ப முலைப்பால்சுரப்பது அதிகரிக்கும். ஆனால், விசேஷஉணவுச்சத்துகள் அடங்கிய தானியங்கள், இலைக்கறிகள், பருப்புவகைகள், கனிந்தபழங்கள், இறைச்சி, மீன்,முட்டை, பாற்பொருட்கள்யாவும் தினமும் சரிவாஒழுங்காகப் போசனத்தில் சேர்த்துக்கொண்டால் வேறுமாத்திரைகள் சாப்பிடவேண்டிய அவசியம் ஏற்படமாட்டாது.

(தொடரும்)

---

புத்தக மதிப்புரை

## இலங்கைச் சரித்திரம்

### போர்த்துக்கீசர்காலம், 1505 – 1657

**ஆசிரியர் : F. X. C. நடராசா**
**விலை : ரூபா இரண்டு**

சரித்திரம் ஆராய்ச்சிக்குரிய ஒரு சாஸ்திரம். எமதுநாட்டின் சரித்திரம் சுயபாஷையில் விரிவாக எழுதப்படாமல் இருப்பது துரதிர்ஷ்டம. ஆங்கிலபாஷையிலேயே இலங்கைச் சரித்திர நூல்கள் அநேகம் எழுதப்பட்டுள்ளன. சுயபாஷையில் கல்விபயிலும் மாணுக்கர்களுக்குப் பயன்படத்தக்கமுறையில் எழுதப்பட்டுள்ள சரித்திர நூல்கள் தமிழ்மொழியில் ஒன்று இரண்டேயுள்ளன. இக்குறையை நீக்கும்பொருட்டு ஆசிரியரவர்கள் பலநூல்களையும்கற்று இந்நூலை ஆக்கியுள்ளார். சரித்திரம் இனியபாஷையில் எழுதப்படாவிட்டால் அதுபடிப்போர்க்கு இனிமைபயவாது. ஆசிரியரவர்கள் இவ்வுண்மையைக் கருத்தாய்க்கொண்டு செவ்விய தமிழில் இந்நூலை யாத்திருப்பது வரவேற்கத்தக்கதாகும. இதுவுமன்றிச் சரித்திரஉண்மைகளை வெறுமனே சொல்வதோடமையாமல் ஆராய்ச்சிமுறையாகவும் இனிதுவிளக்கிச் சொல்லுகின்றார். இந்நூல் உயர்தரவகுப்புகளில் சரித்திரம்கற்கும் மாணுக்கர்களுக்கு அரியதோர் ஆராய்ச்சிநூலாகுமென்பதற் கெட்டுணையும் ஐயமில்லை. போர்த்துக்கீசர் காலத்தைப்பற்றி இதைப்போல வேறெந்தநூலிலாவது விபரம்காண முடியாமலிருப்பதே இந்நூலின்கண் அமைந்த தனிச்சிறப்பாகும். ஆசிரியரின் இந்த நற்றொண்டைத் தமிழுலகம் வரவேற்று இதுபோன்ற பலசரித்திரநூல்களை எழுதுதற்கு ஆக்கம்புரியுமென்று கருதுகின்றோம். எமக்குஅனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகிறோம்,

---

## நூருவது கூட்டநிறைவுவிழா

போளவத்தை விசாரணைப்பங்கிலே "மோட்சஇராக்கினிமாதா", "இரக்கத்தின்மாதா" எனநாமந்தாங்கிய தமிழ் ஆண்பெண் இருபாலாரினது இருபிறசீடியங்களினதும் நூறுவதுகூட்டநிறைவுவிழா சென்ற 9-6-56 சனிவாரம் பிற்பகல் 4மணியளவில் போளவத்தைத் தமிழ்ஆணபாடசாலை மண்டபத்திலே வண. ஞானத்தலைவர் வண. கிளமென்ற் பர்ணுந்துசுவாமியவர்களின் தலைமையில் நடந்தேறியது. செபமாலையுடன் விழாஆரம்பமாகி, முதலில் ஆண்கள்பிறசீடியச் செயலாளர் சகோதரர் பீற்றர் கொலஸ்கோ ஆசிரியரால் இரண்டுவருடஅறிக்கையும், இரண்டாவதாகப் பெண்கள்பிறசீடியச் செயலாளர் சகோதரி மேரி ஜுஹானுவால் இரண்டுவருடஅறிக்கையும் வாசிக்கப்பட்டதும், பெண்பாலார் பிறசீடியத் தலைவி சகோதரி ஒதிலியா ஆசிரியையால் "மரியாள் நமதுதாய்" என்னும் விஷயமாயும், ஆண்பாலார் பிறசீடியத் தனுதிகாரி சகோதரர் ஜோண் யோசேப் திசோராவால பொதுவிஷயமாயும், பிறசீடியத்தலைவர் சகோதரர் றேமுண்டேஸ்ஆசிரியரால் "கூட்டத்தின் அவசியம்" எனும்விஷயமாயும் உபந்நியாசங்கள் செய்யப்பட்டன. பின்னர் ஞானப்பிதா எழுந்து, அங்கத்தினர் அனைவரும் ஈராண்டுகாலமாகச் சாதித்துள்ள சகலசேவைகளுக்குமாக நன்றி தெரிவித்துத் தேவதாயாரின் உதவி யாவர்க்கும் மேன்மேலும்கிடைக்கும்படி மன்றாடுவதாக உறுதிகூறினர். அதன்மேல் சிற்றுண்டிவிருந்து நடைபெற்றுச் சங்கிலிச்செபம் ஓதப்பட்டதும் சகோதரசெயலாளர் யாவர்க்கும் நன்றிகூறிநிற்க, கடைசிச்செபம் படிக்கப்பட்டு ஞானத்தலைவரின் ஆசியுடன் விழாஇனிதே முடிவுற்றது.

—நிருபர்.

---

மட்டக்களப்பு

## தாண்டவன்வெளித் தபால்

**திருஇருதய நூற்றாண்டுவிழா :** மட்டக்களப்பு, தாண்டவன்வெளி பரிசுத்தவியாகுலமாதா கோவிலில் யேசுவின்திருஇருதயத் திருநாளின் நூற்றாண்டுவிழா மிகவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. திருநாளுக்கு முந்திய 5-ம், 6-ம், 7-ந்திகதிகளில் மாலையாராதனைபாடி, கட்டளைக்குரவர் வண. ஜோர்ஜ் ஈ. எல், வம்பேக் சுவாமியவர்களால பிரசங்கமுஞ் செய்யப்பட்டது. விழாவிற்கு முந்தியநாள் வண. எச் ஜே. வெபறர், வண. கட்டளைக்குரவர், வண. ஜே. டிங்கோணிங் குருப்பிரசாதிகள் மூவராலும் மாலையாராதனை பாடப்பட்டதும் சுற்றுப்பிரகாரம் நடந்தேறியது. விழாவன்று பாடற்பூசைநிறைவேறியபின் நாள் முழுவதும் தேவநற்கருணை எழுந்தேற்றஞ்செய்யப்பெற்றுப் பத்திச்சபையினராலும், விசுவாசிகளாலும் இடையறாது சந்திக்கப்பட்டது. மாலை 5 மணிக்கு நிந்தைப்பரிகாரச்செபமும், திருஇருதயப்பிரார்த்தனையும் சொல்லப்பட்டபின் சற்பிரசாதஆசீர்வாதம் அருளப்படலாயிற்று.

**அர்ச். அந்தோனியார் திருநாள் :** தாண்டவன்வெளி, பரிசுத்தவியாகுலமாதாகோவில்பங்கில் அர்ச். அந்தோனியாரின் திருநாளைமுன்னிட்டு முதனாள்பிற்பகல் 4-30மணிக்கு மாலையாராதனை பாடி, அடுத்தநாள் திவ்வியபூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அன்றுபிற்பகல் 6 மணிக்கு அந்தோனிஎன்னும் நாமங்கொண்ட பக்தர்கள்அனைவரும் அர்ச்சியசிட்டர்மேல் தங்களுக்குள்ள பக்தியைத் தெரிவித்துக்கொள்ளும்முகமாக அவர்களின்உபயத்திலே மாலையாராதனை பாடித் திவ்வியநற்கருணைஆசீர்வாதம் அருளப்படலாயிற்று. —நிருபர்.

---

மாந்தைதெற்கு

## கிராமமுன்னேற்ற சங்கம்

மாந்தைதெற்கு கள்ளியகட்டைக்காட்டுப்பகுதிக் கிராமத்தலைமைக்காரர் பிரிவைச்சேர்ந்த ஆடவரின் கிராமமுன்னேற்றசங்கப் பொதுக்கூட்டம் சென்ற 17-ந்திகதிகாலை உயிலங்குளக் கத்தோலிக்க பாடசாலை மண்டபத்திலே தலைவர் எஸ். கிளமென்ற்அவர்கள் தலைமையில் கூடியது. அப்போது பகுதி ஆர். டி. ஓ. அவர்களால் நிகழும் வருடத்திலேபெறக்கூடிய உதவிகளைப் பற்றி விளக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து திரு. பி. ஜே. நல்லையாஅவர்கள் உயிலங்குளப் பகுதியில் வசிக்கும் சலவைத்தொழிலாளருக்கு அவசியம் ஓர்கிணறுவெட்டிஉதவ முன்னேற்றச்சங்கம் முன்வரவேண்டுமெனக்கேட்டு, இந்தக்கிணற்றால் கிராமவாசிகள் பலருக்கும் சலவைஉடுப்புகள் சம்பந்தமான சௌகரியங்கள் உண்டாகுமெனத் தெரிவித்துக்கொண்டார். அவரதுகேள்வி யாவராலும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. வேறுசிலருக்கும் கிணற்றுவசதிகள் வழங்கத் திட்டமிடப்பட்டது.

—நிருபர்.

---

## வெள்ளி யூபிலிவிழா 27–5–56

மிகவும் அன்புக்குரிய யேசுவின் திவ்வியஇருதயத்தின இரக்கத்தினுலும், பரிசுத்த தேவதாயார், அர்ச். திரேசம்மாள் என்பவர்களின் மன்றாட்டினுலும் எங்கள்திருமண வாழ்க்கையின் 25-ம்வருட யூபிலிவிழாவை 27-5-56-ல் ம  தமடுத் திருப்பதியிலே பரிசுத்த பரமதிரித்துவத்தின் மகத்தானதினத்திலே கண்டுகளிக்கும் பாக்கியம்பெற்றோம்.

இந்த 25 வருடகாலத்திலும் நாம் பெற்றுக்கொண்டசகல இகபரநன்மைகட்காகவும் தேவனுக்குத் தோத்திரஞ் செலுத்துகிறோம்.

இனிமேலும், எம்மையும், எமது குடும்பத்தையும் பாதுகாத்து வழிநடத்தும்படி, வல்லபமிக்க தேவனை இரந்து வேண்டுகிறோம்.

**வஸ்தியாம்பிள்ளை சூசைப்பிள்ளை**
**(நட்சத்திரம்) தம்பதிகள்**

மண்டைதீவு

---

### நன்றியறிந்த தோத்திரம்

பரிசுத்த சதாசகாயமாதாவை வேண்டினேன். அவ எனதுசகோதரனின் கடுமையான வியாதியில்நின்று சுகம்கொடுத்தா. மேலும்அவருக்குப் பூரண சுகம்கொடுத்து, அவரை நோயில்நின்று பாதுகாக்கும்படி அத்தாயாரை மன்றாடுகிறேன். நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன். அவவின் நாமம் எங்கும் புகழப்படக்கடவது,

Mannar Mrs. E. C. A.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரத்துக்கு வேண்டுவது உணவுப்பொருள்

## வன்னிப்பகுதியில் கமம்செய்யவேண்டிய அவசியம்

(திரு. நா. சேனுதிராசா, யாழ்ப்பாணக் கமக்காரர் சங்கத்தலைவர்)

உணவுகொடுத்தோர் உயிர்கொடுத்தோர் என்றபடி உலகிலுள்ள சீவராசிகட்கு உணவுகொடுப்பவர்கள் நிலத்தைஉழுது பயிரிடும் கமக்காரராவர். பூமியிலிருந்தே நெல், கோதுமை, காய்கறிவகைகள், கிழங்குவகைகள், பழவகைகளான எல்லாஉணவுப்பொருட்களையும் எடுத்து மானிடர்கள் உண்கிருர்கள். கமச்செய்கையிலுண்டாகும் பொருட்களெல்லாம் தண்ணீரால் விளைகின்றன. தண்ணீரை மழைமூலமாயும், ஆறுகள் குளங்கள்மூலமாயும் பெறுகின்ருேம். வானம்பார்த்தபூமிக்கு மழைதான்பிரதானம். மழைஇல்லாவிட்டால் விளைவுஏற்படாது.

"விண்நின்று பொய்ப்பின், விரிநீர் வியனுலகத் துள்நின்றுடற்றும் பசி" என்றும் சொன்ஞர் நாயஞர். பூமியிலுள்ள சீவராசிகளின்சீவியம் மேலுலகமாகிய விசும்பில் தங்கிநிற்கின்றது. மழைமுறையாய் வருஷிப்பது நாம் கடவுளுக்கும், சீவகோடிகட்கும் செய்யும் பணியில்தான் தங்கியிருக்கிறது. புண்ணியச்செயல் செய்தால் குளிர்ச்சியான மழையைக் காணலாம். பாவச்செயல் செய்தால் கொடிய நெருப்புமழைதான் பெய்யும். நெருப்புமழைபெய்தால் பசிஏற்பட்டு! உடல்மெலிந்து சீவன்கள் மடியும்.

கமச்செய்கைக்குத் தண்ணீர்மாத்திரமல்ல, கால்நடைகளான மாடு ஆடுகளும் முக்கியமாகவேண்டும். ஏனெனில், நிலத்தை உழுது பண்படுத்தப் பசளைகொடுத்துப் பயிரை ஓங்கிவளரச்செய்ய எருவைத்தவிர, மானிடரை வளர்க்கும் பாலைத்தரப் பசுக்களும், கசநோயைக்கூட வெட்டக்கூடிய ஆட்டுப்பாலைத்தர ஆடுகளும் இன்றியமையாதன. இந்தக் கால்நடைகளே கமச்செய்கைக்கு மூலகாரணமானவை. பசுப்பால், ஆட்டுப்பாலே இப்பூவுலகிலுள்ள அமிர்தம். கால்நடைகளை நல்லசத்துள்ள உணவுகொடுத்து வளர்க்க வேண்டும். ஈழநாட்டிலுள்ள தமிழ் நாட்டில் மழைகுறைவு. தண்ணீர்ப் பஞ்சம்அதிகம். எப்படியாவது உபாயமாய்க் கால்நடைகளின் தீன்சாமான்களைப் பூமியில்வைத்து உண்டாக்கி வளர்த்தல் வேண்டும். கால்நடைகள் இல்லையேல் மானிடர்சீவிக்க முடியாது.

இலங்கையில்வாழும் மக்களுள் 90 சதவிகிதம் கமக்காரர்கள். இலங்கையின் இயற்கைஅமைப்பும் கமச்செய்கைக்குரிய பூமியாய்க் கடவுளால் அமைக்கப்பெற்றிருக்கின்றது. எங்கள்முன்னேர் கமச்செய்கையில் ஈடுபட்டு உழைத்தார்கள்; நெல், அரிசிஎல்லாம் பிறதேசங்கட்கு அனுப்பிஞர்கள்என்று சரித்திரம் கூறுகின்றது. இதுவரை நாம்கமச்செய்கையில் ஊக்கமில்லாது அந்நிய தேசத்துப் பொருட்களை ஏராளமான பணத்தைக்கொடுத்துப் பெற்றுச் சீவித்தோம். அதனுல் எங்கள் சொந்தநிலங்களெல்லாம் பாழாய்க் கிடந்தன. கோடிக்கணக்கான ரூபாவும் இந்தநாட்டைவிட்டுப் பிறநாடுகட்குச்சென்றது. கைவறளத்தொடங்கிவிட்டது. முன்னர் மலாயாவிலிருந்தும், மலையாளத்திலிருந்தும், சிங்களநாட்டிலிருந்தும் தமிழ்நாட்டிற்குப் பணம்வந்தது. சிங்களநாட்டிற்கோ தேயிலைக்கும், றப்பருக்கும், தேங்காய்க்கும், மின்னறத்திற்கும் அமெரிக்க, ஐரோப்பிய, ஆஸ்திரேலியநாடுகளிலிருந்து பணம்வந்தது. சிங்களமக்கட்கும், தமிழ்மக்கட்கும் பணம் முன்னுள்வந்த விதம்போலில்லாது குறைந்துவிட்டது.

தமிழ்மக்கள்வசிக்கும் பகுதிகளில் நெல்ஒன்றையே நம்பியிருக்க வேண்டியிருக்கின்றது. இந்தநெல்லை உண்டாக்குவதற்கு ஆறு, குளம், ஏரி வேண்டும். வேண்டியகாலத்தில் மழை வருஷிக்கவேண்டும். இப்பகுதிகளில் பூரணமாய்த் தண்ணீர்ப் பாய்ச்சலுக்குரிய வசதியுமில்லை. மழையும் காலத்திற்குப் பெய்வதுமில்லை. சிலசமயம் அகாலமழை பெய்கிறது. இப்படியான நிலையில் தமிழ்மக்களானநாம் இருக்கின்ருேம். எங்கள்உணவிற்கு நாம் சீஞவிலும், பர்மாவிலுமிருந்து அரிசியை வருவித்துக் கோடிக்கணக்கான ரூபா அனுப்பிச் சாப்பிடுகின்ருேம். ஒரு நாட்டின் பூரணசுயராச்சியத்திற்கு முதல் உணவும், உடையும் அந்த நாட்டில் விருத்தியடைய வேண்டும். அதன்பின்னர்தான் அரசியல்விடுதலை. எந்தஎந்தப்பூமியில் என்ன என்னபயிர் பலிதமாய் உண்டாகுமோ அதைஅதைவைத்து உண்டாக்கவேண்டும்.

யாழ்ப்பாணமக்கள் தென்னையை வைத்து உண்டாக்கவேண்டும். தென்னைமரங்களெல்லாம் தென் இலங்கையில்தான் ஏராளம். தென்னந்தோட்டங்களின் சொந்தக்காரர்கள் பிறதேசங்களுடன் கொப்பரு, தேங்காய், தேங்காய்எண்ணெய் அனுப்ப ஒப்பந்தங்கள் செய்துகொண்டார்கள். ஆனதாற்ருன் தேங்காயும், தேங்காய்எண்ணெயும் நாலுஐந்துவருடகாலமாய் விலை ஏறின. மக்கள்தொகையும் பெருகிச் சாப்பாட்டுப்பொருளும் பிறதேசங்கட்கு அனுப்பப்பட்டால் உள்ளூர்வாசிகட்குத் தின்பண்டங்கிடையாதே. ஆனதால் சாப்பாட்டிற்கு வேண்டிய பொருட்களை அவசியம் வைத்து உண்டாக்கவேண்டும். வன்னிப்பகுதியில் ஏராளமானநிலம் சாகுபடிசெய்ய இருக்கின்றது. தமிழ்மக்கள் நல்லாய்க் கமஞ்செய்யலாம். துணுக்காயில் 60,000 ஏக்கர் நிலத்தை அரசாங்கம் படித்தபிள்ளைகட்கும், மற்றவர்கட்கும் தலைக்கு ஐந்துஏக்கர்வீதம் கொடுக்கத் தீர்மானித்துள்ளது. அப்படியானநிலத்தைப் பெற்றுக் கமஞ்செய்யவேண்டும். கமச்செய்கையையும் விருத்திசெய்து, கால்நடைகளையும்பெருக்கித் தமிழ்நாட்டில் பாலுந்தேனும் ஓடும்படிசெய்து நாட்டின்செல்வத்தைப் பெருக்கும்படியும், சுபீட்ச வாழ்வு வாழும்படியும் வேண்டுகின்றேன்.

---

# "நீ அவரைப் பார்த்திருக்கிருய்"

ஓர்குருடனுகப் பிச்சைகேட்டு அலைந்துகொண் டிருந்தவன் திடீரென்று பார்வைபெற்றவனுய்க் காட்சியளித்தான். கண்டவர் திகைத்துப்போயினர். "வழக்கமாய் உட்கார்ந்துகொண்டு பிச்சைகேட்பவன்அல்லவா இவன்?" என்றனர். "அவன்தான்" என்றனர் சிலர். "அவனுக இருக்கமுடியாது; இவன் அவனைப்போல் இருக்கிருன்" என்றனர் மற்றையோர். அவனே: "நான்தான் அவன்" என்று சொல்லிக் கொண்டிருந்தான். "உன் கண்கள் எவ்வாறுதிறந்தன?" என்று அவர்கள் அவனைவினவினர். "யேசுநாதர் என்னும்மனிதர் என்கண்களிற் களிமண்ணைப்பூசிக் குளத்திற்குச் சென்று கழுவச்சொன்ஞர்; நான் சென்று கழுவினேன்; பார்க்கிறேன்" என்று அவன் கூறினுன். "அவர் எங்கே?" என்று அவர்கள்கேட்க, "எனக்குத் தெரியாது" என்ருன் அவன். தங்கள்வியப்பிற்கு விளக்கம் பெறும்வண்ணம் அவர்கள் பரிசேயரிடம் அவனை அழைத்துச்சென்றனர்.

பரிசேயர் விஞவியதற்கும் அவன் முன்போன்றே விடைகூறினுன். குருடன்குணமானதை மூடிமறைக்க முடியுமா? ஆயினும், குற்றங்காண வேறுவழியா கிடையாது? "ஓய்வு நாளில் ஒருவேலையும் செய்யலாகாது" என்பது வேதஒழுங்கல்லவா? தெய்வகட்டளையைமீறியவர் தெய்வத்திடமிருந்து வந்தவராய் இருக்க முடியுமா? "இந்தமனிதன் தெய்வத்திடமிருந்து வந்தவன் அல்ல; ஏனென்ருல், இவன் ஓய்வுநாள் ஒழுங்கை அனுசரிக்கவில்லை" என்று சிலபரிசேயர் கூறினர். இத்துடன் நின்றிருந்தால், அவ்வாக்கை வேதவாக்காகக்கொண்டு பொதுமக்கள் திரும்பிப்போயிருப்பர். எவ்வளவு சூதுநிறைந்தவர்களும் சிலவேளைகளில் தம்மையறியாது உண்மையைக் கக்கிவிடுவது உண்டல்லவா? அதுபோலவே, வேறுசிலபரிசேயர் "பாவியான மனிதன்ஒருவன் இத்தகைய அதிசயங்களை எவ்வாறு செய்யஇயலும்?" என்று காரியத்தை மறந்து கதையை வெளியேசொல்லிவிட்டனர்.

கோட்டைக்குள்ளே குத்துவெட்டு நடந்துவிட்டது. வாய்விட்டவர்களும் நிலைமையைஉணர்ந்து நாக்கைக் கடித்துக்கொண்டனர். சொன்னசொல்லை விழுங்கமுடியுமா? பக்கத்திலே கும்பல்நின்று பார்த்துக் கொண்டிருக்கிறது. ஒன்றிலே விட்டுக்கொடுத்தால், மானம் என்ன ஆவது? எதிர்வாதிக்குச் சாட்சியாய் இருப்பவனையே நம்பக்கம் இழுத்துக் கொண்டால் எளிதில் வெற்றிஎய்தலாம் அல்லவா? பரிசேயர் என்ருல் அவனுக்கும் பயம்இருக்காதா? அதிகாரத்தைக்காட்டி அதட்டிக்கேட்போம்; அவன் அசைந்துகொடுத்தால் இந்தக்கும்பலை அதட்டி அனுப்பிவிடலாம் என்றனர்.

பரிசேயர்மீண்டும் அவனைநோக்கி: "உனது கண்களைத்திறந்த மனிதனைப்பற்றி நீ என்னசொல்லுகிருய்?" என்றனர். "அவர் ஒருதீர்க்கதரிசி" என்ருன்அவன். அவர்களது மனக்கோட்டையில் இடிவிழுந்தது. கண்களைத்திறந்ததாக ஒப்பினுல்தானே திறந்தவர் தீர்க்கதரிசியாக இடமிருக்கிறது? அந்த அடிப்படையை அழித்துவிட்டால் வெற்றிதானே வந்துவிடும். "இவனது பெற்ருேரைக் கேட்கவேண்டும்; இவன் உண்மையிலே குருடனுய் இருந்தவனு என்பதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும்" என்றனர் பரிசேயர். கேள்விப்படுவதையெல்லாம் நேரே சென்று விசாரித்துஅறிந்தா உலகம் நம்புகிறது? அவ்வாறே அந்தக்கும்பலும் நம்பிச்செல்லுமென்று பரிசேயர் கருதினர்.

நினைப்பதுபோலவா காரியம்நடக்கிறது? கண்மூடிக் கும்பலிலும் காரியகாரராய் ஒருவர்இருவர் இருக்கலாம்அல்லவா? யூதருள்ளேசிலர் அவனது பெற்ருேரை அணுகி: "குருடனுய்ப் பிறந்தவனென்று நீங்கள்கூறும் உங்கள்மகன் இவன்தானு? அப்படியானுல், இவன் இப்பொழுதுபார்ப்பது எப்படி?" என்று வினவினர். உண்மையை அறிவது அவர்கள்நோக்கமா, அன்றேல் குற்றஞ்சாட்டுவது அவர்கள் குறிக்கோளா—யார்கண்டார்? ஏற்கனவே யேசுநாதரைக் கிறீஸ்துநாதரென்று ஏற்றுமொழிபவரைச் செபக்கூடத்திற்குள் நுழையாவண்ணம் விலக்கிவைத்தல் வேண்டும்என்று ஏற்பாடாகியிருந்தது. எனவே, குருடனின் பெற்ருேர் உலகியல்விவேகத்தோடு பதில்கூறினர்: "இவன் எங்கள்மகனென்பதும், பிறவிக்குருடன் என்பதும் எங்களுக்குத்தெரியும்; ஆனுல், இவன் இப்பொழுது எப்படிப் பார்வைஅடைந்தான் என்பதும், யார் இவனதுகண்களைத் திறந்துவிட்டார்என்பதும் நாங்கள் அறியோம்; இவன் வயதுவந்தவன்தானே; இவனையேகேளுங்கள்; தன் கதையைத் தானேபேசட்டும்" என்றனர். அவனைக்கேட்க என்னஇருக்கிறது?

அவர்கள் மீண்டும் அவனை அழைத்து நயமொழி பேசினர்: "கடவுளுக்கு மகிமைசெலுத்து; அந்தமனிதன் ஒருபாவிஎன்று நாங்கள் நன்குஅறிவோம்" என்றனர். "அவர் பாவியோ, அல்லவோ—நான் அறியேன்; ஒன்றுமட்டும் அறிவேன்; குருடனுய் இருந்தநான் இப்பொழுது பார்க்கிறேன்" என்ருன் அவன். நயமொழி பயனற்றுப் போகவே, "அவன் என்னசெய்தான்? எப்படி உன்கண்களைத் திறந்தான்?" என்று அதட்டிக்கேட்டனர். உண்மை சிலவேளைகளிற் கேலியாகவும் தொனிக்கும்அல்லவா? நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்; நீங்களும் கேட்டீர்கள்; மீண்டும் கேட்க விரும்புவது ஏன்? நீங்களும் அவருக்குச்சீடராக விரும்புகிறீர்களோ?" என்று அவன்கூறக்கேட்ட யூதர் கொதித்தனர். அவனைப் பலவாறு திட்டினர். "நீயே அவனுக்குச்சீடன்; நாங்கள் மோயீசனின் சீடர்; கடவுள் மோயீசனிடம் பேசினரென்று நாங்கள்அறிவோம்; இவனைப் பொறுத்தமட்டில் இவன்

(அடுத்தபக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கிருந்து வந்தவனே அறியோம்" என்றனர்.

அநீதிக்கு எவ்வளவுநேரம் அடங்கி ஒழுகுவது? உண்மை தன்அனுபவம்மூலமாக உறுதிப்பட்டநிலையில் அதிகாரதோரணைகளைக்கண்டு அஞ்சிமறைக்கப்படுவதன்று. அவன் இப்பொழுது திறந்து பேசலானான்: "ஏன்? இந்த அதிசயத்தைப்பற்றி என்னசொல்லுகிறீர்கள்? அவர் எங்கிருந்து வந்தவர்என அறியோம்என்கிறீர்கள்; அவரோ என்கண்களைத் திறந்திருக்கிறார்; கடவுள் பாவிகளுக்குச் செவிசாய்ப்பதில்லையென்று நாம்அறிவோம்; தம்மை ஆராதித்துத் தமதுசித்தப்படி ஒழுகுபவருக்கே அவர்செவிசாய்க்கிறார்; உலக தொடக்கமுதல் எவனும் பிறவிக்குருடனின் கண்களைத் திறந்ததாக நாம் கேள்விப்பட்டதில்லை; இவரும் கடவுளிடமிருந்து வந்தவரல்லவென்றால், இவரால் ஒன்றும்செய்ய முடியாது" என்றான். இந்தஆணித்தரமான பதிலைக்கேட்டயூதர் மறுப்புக்கூறஇயலாது திகைத்தனர். அகந்தை தனதுதோல்வியை ஒப்புக்கொண்டிருந்ததல்லவா? நேரடிப்பேச்சில் நியாயம் இல்லை என்று கண்டதும், அகந்தைகலந்த அதிகாரதோரணையால் அவர்கள் அவனை மடக்க முயன்றனர். "நீ முற்றிலும் பாவங்களிற்பிறந்தவன்; நீயா எங்களுக்குப் புத்திபுகட்டுகிறாய்?" என்று கூறி அவனை வெளியேதள்ளினர்.

உண்மையை அறியவேண்டும், ஒப்பவேண்டும்என்ற அடிப்படையோடு ஆராய்ச்சிதொடங்குமானால் உண்மையை எட்டுவது எளிது. ஆனால், பெரும்பான்மையோரின் ஆராய்ச்சி எப்படி இருக்கிறது? உண்மையைப்பற்றி அவர்களுக்குக் கவலை இல்லை. தாம்கொண்டகருத்தை நிரூபிக்கும்வகையில் உண்மை இணங்கிவர வேண்டுமென எதிர்பார்க்கின்றனர். அது இணங்கிவராதபோது தமதுபட்டம், பதவி முதலியவற்றைக்கொண்டு அதனை நிலைநாட்ட முற்படுகின்றனர். இதனால் தாமே உண்மையைவிட்டு விலகிச்செல்வதோடு நில்லாமல் தமது பட்டம், பதவி முதலியவற்றை மதித்துத் தம்மைநம்பும் பல்லாயிரம்மக்களும் உண்மையைவிட்டு விலகிச்செல்லக்காரணமாகின்றனர். இந்த ஆன்மீகக்கொலையை நமதுஆண்டவர் வன்மையாகக்கண்டித்தார்.

ஆண்டவர் அக்குருடனைத் திரும்பக் கண்டபோது, "நீ தெய்வகுமாரன்மீது நம்பிக்கை கொள்ளுகிறாயா?" என்று கேட்டார். "ஆண்டவரே! அவர் யார்?" என்று அவன் கேட்டான். "நீ அவரைப் பார்த்திருக்கிறாய்; உன்னோடு பேசுபவரும் அவரே" என்று ஆண்டவர்கூறினார். "நம்பிக்கைகொள்ளுகிறேன் ஆண்டவரே!" என்றுகூறித் தரையில் வீழ்ந்து அவரை ஆராதித்தான் அவன். அப்பொழுது ஆண்டவர் "காணாதவர் காணும்படியும், காண்பவர் குருடராய்ப் போகும்படியும் நீதித்தீர்ப் பிடுவதற்காகவே நான் வந்தேன்" என்றார். நின்றபரிசேயர் "நாங்களும் குருடரோ?" என்றனர். ஆண்டவர் "நீங்கள் குருடராய்இருந்திருந்தால் உங்களுக்குப் பாவம்இல்லாதுபோயிருக்கும்; 'பார்க்கிறோம்' என்று நீங்கள் சொல்லிக்கொள்வதனால் உங்கள்பாவம் உங்களோடு நிலைத்திருக்கிறது" என்றார்.

# நான்கண்ட பெல்ஜியம்

[ வண. டி. எஸ். லூர்துசாமிஅவர்கள் ]

(சென்றவாரத் தொடர்ச்சி)

## பொருளாதாரம்

கடந்த இரு உலகயுத்தங்களிலும் பெல்ஜியநாடு ஜேர்மனியரின் ஆக்கிரமிப்பால் ஆறரைஆண்டுகள் அடிமைப்பட்டு அல்லலுற நேர்ந்தது. அதனிமித்தம் நாட்டின்பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டது. எனினும், ஆக்கிரமிப்பு முடிந்தபின் நாடுவெற்றிகரமாக வற்றாச்செல்வநிலையுடன் முன்னேற்றப்பாதையில் செல்லுகின்றது. பெல்ஜியத்தில் வழங்கும்நாணயத்திற்குப் 'பிராங்க்' (Franc Belge) என்றுபெயர். 10 பெல்ஜிய பிராங்குகளின் பெறுமதி ரூபா ஒன்று. இந்நாணயம் மிகத்திடமானது. கடினமானது. பொருளாதார நூல்வல்லுனர் இதைக் "கடின நாணயம்" என்று அழைக்கின்றனர்.

## தொழில்களும் வளங்களும்

பெல்ஜியம் நிலக்கரிவளத்திற்குப் பெயர்போனது. ஆண்டுதோறும் ஏறக்குறைய 3 கோடிதொன் நிலக்கரி தோண்டியெடுக்கப்படுகிறது. இச்சுரங்கப்பொருள் நாட்டின் உற்பத்தியிலே முக்கியஇடம் வகிப்பதால், "பெல்ஜியத்தின் கறுப்புரொட்டி" என்று பெயர்பெற்றுள்ளது (Le Pain Noir de Balgique). — இரும்புபோன்ற வேறுபல சுரங்கப் பொருட்களும் இங்கு பெருவாரியாகக் கிடைக்கின்றன. அவைகள் சம்பந்தமான தொழிற்சாலைகளிலே சுமார் 47,000 பேர் வேலைசெய்கின்றனர். இச்சுரங்கப்பொருட்கள் ஆண்டுதோறும் 1 கோடியே 2 லட்சம்தொன் உற்பத்திசெய்யப்படுகின்றன. அடுத்துவருவது நெசவு. இதற்கெனக் கொங்கோவிலிருந்து ஏராளமானபருத்தி இறக்குமதியாகின்றது. 'லின்' அல்லது 'லினென்' நாட்டிலேயே கூர்த்ரேய்என்ற பிரதேசத்தில் பயிராகின்றது. கம்பள நெசவுக்குத் தேவையான மூலப்பொருள் ஆஸ்திறேலியா, ஆர்ஜென்ரீனா, தென்னாபிரிக்காமுதலிய நாடுகளிலிருந்து வருகின்றது. நெசவு ஆலைகளில் வேலைசெய்கிறவர்களின் தொகை ஏறக்குறைய 1 லட்சத்துப் 15ஆயிரம்பேர். கண்ணாடி, வைரம், கந்தகாமிலம், புகைப்படக்கருவி முதலியவற்றைச்சார்ந்த பலபிறவகைத் தொழில்களும் நடைபெறுகின்றன. பொதுவிலே நாட்டிற்கு மிகுந்தவருமானமுண்டு.

## கல்வியும் கலையும்

கல்விவசதிகளுக்குச் சிறிதுங் குறைவில்லை. மக்களின் தொகையிலே இந்தியாவிலும் சுமார் 40மடங்குசிறிய இந்நாட்டில் நான்கு பெரிய சர்வகலாசாலைகள் இருக்கின்றன. அவற்றின் இருப்பிடம் லூவேன் (கத்தோலிக்க நிர்வாகம், 8,700 மாணவர்), லீஜ்நகரம் (அரசாங்க நிர்வாகம், 3,500 மாணவர்), காண்ட் (அரசாங்கநிர்வாகம், 3,000 மாணவர்), பிறஸல்ஸ்நகர் (சுயேச்சைநிர்வாகம், 3,500 மாணவர்) — சர்வகலாசாலைஎன்ற பூரணநிலையும், பெயரும்பெறாது இரண்டொரு பாடல்கள், அல்லது துறைகளுக்கென்றுமட்டும் நிறுவப்பட்டுள்ள ஆராய்ச்சி நிலையங்களும் பல உள. இவற்றில் தத்துவஞானம், இலக்கியம், விஞ்ஞானம், அரசியல், பொருளாதாரம், மருத்துவம், இராணுவம் வாணிபம், நெசவு, ஓவியம், இசை, நடனம், கட்டடக்கலை முதலிய பல வகைப்பட்ட துறைகளுள் இரண்டொன்றைப்பற்றித் தனிப்பட்ட ஆராய்ச்சிகளும், பேருரைகளும் நிகழ்கின்றன. தத்துவசாஸ்திரம், விஞ்ஞானம், இலக்கியமாகிய இம்மூன்றிற்குமென்று பிறஸல்ஸிலும், நாமூரிலும் கத்தோலிக்கரது தனிநிர்வாகத்திலுள்ள ஆராய்ச்சிநிலையங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. கணிதம், பூகோளம், சரித்திரம், வானநூல், தாவரநூல்முதலிய பாடங்களுக்கென்று பெரும்பாலும் அரசாங்கஆதரவையும், தலைமையையுங்கொண்ட சுமார் 105 கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவைகள் ஆண்டுதோறும் கூட்டங்கள், மகாநாடுகள்பல நடத்தி, அறிஞர் ஆராய்ச்சிவல்லுனர் அனைவரையும் ஒன்றுதிரட்டி, அவர்கள் தத்தம் அனுபவங்களையும், ஆராய்ச்சிமுடிவுகளையும் கொட்டிக்குவித்து மற்றவர்களோடு பரிமாறிக்கொள்ள வசதியளிக்கின்றன. உயர்நிலைப்பள்ளிகள், மத்தியபள்ளிகள், ஆரம்பபள்ளிகள் ஆதியன அனந்தம். மத்தியபள்ளிகளில் பயிலும் மாணவர்மட்டும் ஏறத்தாழ 1 லட்சத்து 32 ஆயிரம் பேர்.

பெல்ஜியம் கலைவளம்மிகுந்தநாடு. பிறஸல்ஸிலும், வேறுபல நகரங்களிலும் கலைக்கூடங்கள் பல உள. 15 முதல் 18-ம் நூற்றாண்டுகளைச் சார்ந்த 'பிளொமான்' கலைக்குவியல்கள் மெத்தவும்ரசிக்கத்தக்கன. ஆன்வெர்நகரில் வாழ்ந்த றூபென்ஸ் (Rubens) எனும்கலைஞர் மக்களால் பெரிதும் போற்றப்படுகின்றார். கோதிக்கமுறையில் எழுப்பப்பட்டுள்ள அழகியஆலயங்கள் பலவற்றைப் பெல்ஜியத்தில் விழிகளாரக்கண்டு களிக்கலாம். பிரான்ஸிலும் அவ்வாறே. உதாரணமாக, தூர்னேநகரிலுள்ள ஐந்துகோபுரங்களையுடைய பிரமாண்டமான மேற்றிராசனஆலயம் ஈண்டுகுறிப்பிடற்பாலது. கோதிக்கமுறையில் எழுப்பப்பட்டுள்ள அழகிய நகரமாளிகைகளுக்கும் பெல்ஜியம் சிறப்புற்றது. மணமக்கள் கோவிலுக்குச்செல்லுமுன் தங்கள் மணத்தைப்பற்றி அரசினர்முன் குறிப்பெழுதிவைக்க இந்தமாளிகைக்குத்தான் வரவேண்டும். பிறஸல்ஸ்நகரிலும், லூவேன் நகரிலுமுள்ள மாளிகைகள் உலகப்புகழ் பெற்றவை. இவைகள் இராவேளையில் மின்சார ஒளிவெள்ளத்தில் மிதந்துசொலிக்கும் அற்புதகாட்சியை ஆசைதீரப் பார்த்துமகிழத் தினமும் ஆயிரமாயிரம்பேர் அங்கு சென்றுகூடுகின்றனர். பிளொமான் முறையில் கட்டப்பட்டுள்ள வீடுகளும், மாளிகைகளும் ஆங்காங்கு காணக்கிடக்கின்றன. அவைஒருதனி ரகத்தைச் சார்ந்தவை.

(தொடரும்)

**மௌனமே மங்கையருக்கு மேன்மையான மணியாரம். ஆனால், அணிந்தால் அல்லவோ!**

## தமிழாசிரிய கிளைச்சங்கம்

மன்னார், தமிழ்ஆசிரியசங்க முருங்கன்பகுதிக் கிளைச்சங்க பொதுக்கூட்டம் சென்ற 16-ந்திகதி சனிக்கிழமை முற்பகல் 10மணியளவில் உயிலங்குளக் கத்தோலிக்கபாடசாலை மண்டபத்தில் சங்கதலைவர் திரு. எஸ். அந்தோனிப்பிள்ளை அவர்கள்தலைமையில் நடைபெற்றது. தலைவரின் ஆரம்பஉரையின் பின் காரியதரிசியின் அறிக்கைவாசிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து சென்ற 5-ந்தேதி கொழும்பு, கோல்பேஸ் மைதானத்தில் நடைபெற்ற சத்தியாக்கிரகத்திலகலந்து அனுபவம்பெற்ற ஆசிரியர் ஜே. அருளப்புஅவர்கள்எழுந்து தாமும், தம்மைசசார்ந்த சத்தியாக்கிரகிகளும் அனுபவித்த சொல்லில் அடங்காத் துன்பவேதனைகளை இருகண்களாலும் தாரைதாரையாக நீர்சொரிய விம்மல்பொருமலுடன் வெளியிட்டனர். அதனைக்கேட்ட ஆசிரியர்கள் தங்களை அறியாமலே கண்ணீர் சொரியலாயினர். பின்னர், ஆசிரியர் எவ் சூசையப்பு குரூஸ்அவர்களால் "ஆசிரியர்சங்க விருத்தி" என்னும்விஷயம்பற்றிச் சிறந்த ஓர்உபந்நியாசம் செய்யப்பட்டது. ஈற்றில் தமிழ்மொழிக்குற்ற கவலைக்குரிய நிலைமை பற்றித் தங்கள் மனவேதனையைத் தாய்ச்சங்கமூலம்பிரதமருக்கும், கல்விமந்திரிக்கும் தந்திமூலம் தெரிவிப்பதென்றும், சத்தியாக்கிரகத்தில் ஆசிரியர்போல் கலந்துகொண்ட ஆசிரியர்கள் ஜே. அருளப்பு, கு. பத்திநாதர் என்பவர்களுக்கு ஓர் வரவேற்புவிழா நடத்துவதென்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. ஈற்றில் தலைவரின் நன்றியுரையுடன் கூட்டம்கலைந்தது.

— நிருபர்

## துள்ளுகுடியிருப்புத் தபால்

பேசாலை, துள்ளுகுட்டிக் குடியிருப்புக் கிராமத்தில் நவமாய்அமைத்த கிராமமுன்னேற்றசங்க கட்டடத்தைச் சென்ற 2-6-56-இல் மன்னார்க்காரியாதிகாரிஅவர்கள் திறந்துவைத்தார். அவ்வமயம் திரு. ஜே. வி. பல்டானோ, ஜே. பி அவர்கள்உட்பட, அரசாங்க உத்தியோகஸ்தர்பலர் சமூகமாயிருந்தனர். பாடசாலைப்பிள்ளைகள் வரவேற்புப்பாக்கள் படித்தார்கள். ஆசிரியர் திரு. பி. இராயப்புஅவர்கள் பேசியபோது: இக்கிராமம் சிறியதாயினும் ஓர்நிலையான கட்டடத்தைப் பெற்றிருப்பது சங்கஅங்கத்தவர்களின் விடாமுயற்சியையும், மேலதிகாரிகளின் தாராள மனப்பான்மையையும்காட்டுகிறதெனக் கூறி, அதனை அமைப்பதற்கு உதவி செய்த ஒவ்வொருவரையும் பாராட்டிப் பேசினார். எஸ். ஆர். டி. ஓ அவர்கள் தமதுபிரிவிலுள்ள சிறியசிறியகிராமங்களில் இந்தக்கிராமமுன்னேற்ற சங்கந்தான் முதன்மைஸ்தானம் பெற்றிருக்கின்றதெனக்கூறிக் கடமையாற்றும் ஆசிரியரின்சேவையையும் பாராட்டினார். தலைவர் தமதுஉரையில் கட்டடத்தைமுடித்ததல்ல, ஆனால், அதனைத் தகுந்தவிதமாக உபயோகிப்பதைப் பார்ப்பதே தமக்கு மிகவும்மகிழ்ச்சி தருமெனக் கூறினார். காரியதரிசி அங்கத்தவர்களுக்கும், அவ்வேளை சமுகம்தரமுடியாமற்போன கட்டளைக்குரவர் வண. எஸ். எஸ். வில்லரவராசிங்கம் சுவாமியவர்கட்கும் நன்றிதெரிவித்ததுடன் திறப்புவிழா இனிதே நிறைவேறிற்று.

— நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதேச வர்த்தமானம்

### கிளிநொச்சி இரட்டைக்கொலைகள்

கிளிநொச்சிப்பகுதியிலே ஓர்பெண்ணையிட்டு உண்டான சச்சரவைத் தொடர்ந்து, சங்கானையைச்சேர்ந்த எஸ். இராசரத்தினம், வி. கதிரவேல் எனுமிருவரும் வி. செல்லத்துரை அல்லது சின்னத்தம்பி என்னும்ஒருவனுல் துப்பாக்கிகொண்டு சுடப்பட்டனரென்றும், கோடரிகொண்டு வெட்டப்பட்டனரென்றும் செய்தி பரந்துள்ளது. இருவரும் மாங்குளத்திலே துணுக்காய்த்தெருவில் குற்றுயிராய்க் கிடக்கக் காணப்பட்டு, ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுமுன்னரே இறந்துபோயினராம். இக்கொலைகளிலே சம்பந்தப்பட்டவன் கையில் துப்பாக்கியுடன் காட்டில்மறைந்துதிரிவதாகப் பொலிஸ் அறிக்கை தெரிவித்திருக்கிறது.

### இந்தியவர்த்தக ஸ்தாபனங்கள்

இலங்கையிலே பத்தாயிரம்ரூபா முதல் இருபத்தையாயிரம் ரூபாவரையிலே முதலிட்டு வியாபாரம் நடத்திவந்த நூற்றுக்குமேற்பட்ட இந்திய சிறியவர்த்தகஸ்தாபனங்கள் கடந்தசில மாதங்களிலே தங்களுடைய வியாபார லைசென்ஸ்களை அரசாங்கம் புதுப்பிக்க மறுத்தமையாலே தங்கள் வர்த்தக ஸ்தாபனங்களை மூடிவிட்டிருக்கின்றன. இதன்விளைவாக இந்தவர்த்தக ஸ்தாபனங்களில் வேலைகொள்ளப்பட்டு வந்த சுமார் ஆயிரம் இலங்கையர்கள் பிழைப்பின்றித் தவிக்கவேண்டியநிலைமை ஏற்பட்டிருப்பதாக இந்தியவர்த்தகசங்க அதிகாரிஒருவர் தெரிவித்திருக்கின்றார்.

### புதியவரவு செலவுத்திட்டம்

வருகிறஐப்பசிமாதம் 1-ந்திகதியன்று ஆரம்பமாகும் இலங்கைப் புதியநிதிவருடத்திலே மிகப்பெருஞ் செலவுதொகைகளில்ஒன்று அரிசிஉபமான்யத்துக்கொன்று 10கோடிரூபாவும், பாடசாலைப்பிள்ளைகளின் இலவசமத்தியானப்போசனத்துக்கென்று 1 கோடியே 50லட்சம்ரூபாவும் ஒதுக்கிவைத்திருக்கின்றது. தற்போது சித்தஞ்செய்யப் பட்டுள்ள வரவுசெலவுத்திட்டப்படி வருமானத்தைக்காட்டிலும்செலவு ஏறக்குறைய 16கோடியே 86லட்சம்ரூபாவால் அதிகரித்திருக்கிறது. பிந்தஉபமானயங்கள், மந்திரிசபை செய்யுந்திருத்தங்கள்காரணமாக இத்தொகை 17கோடியே 8லட்சம் ரூபாவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதனுல் வரவையும், செலவையும் சமன்படுத்துவதற்கு அரசாங்கம் இத்தனைகோடிரூபாவுக்கும் வழிகாணவேண்டியநிலைமை ஏற்பட்டிருக்கிறது.

### காலநிலை

சென்றவியாழக்கிழமைஇரவு பொதுவாக யாழ்ப்பாணமுழுவதும் ஓர் பாட்டம் மழைபெய்தது. அதுமுதல் மப்பும்மந்தாரமுமாகவே இருந்துவந்து நேற்றைத்தினமும் சிலபகுதிகளில் ஒருபாட்டம் நல்லமழை பெய்திருக்கிறது. அதிகமான மழைக்கோலம் காணப்படுகிறது. இலங்கையின் தென்பகுதிகளிலும், தென்மேற்குப்பகுதிகளிலும் பலவிடங்களிலே பெருமழை பெய்திருப்பதாகவும், பள்ளமானநிலங்களும் பலதெருக்களும் வெள்ளத்தின் வாய்ப்பட்டிருப்பதாகவும், அதனுல் அநேககுடும்பங்கள் தங்கள் வீடுவாசல்களைவிட்டு வெளியேறியிருப்பதாகவும் செய்திகிடைத்திருக்கிறது.

<u>புத்தக மதிப்புரை</u>

## இலங்கைச் சரித்திரம்

### ஒல்லாந்தர்காலம், 1658—1796.

**ஆசிரியர் : வித்துவான் F. X. C. நடராசா**
**விலை : ரூபா 1-00**

சுயபாஷைகளிலே கல்விகற்கவேண்டிய இந்நேரத்திலே தமிழில் அநேகம் நூல்கள் இருத்தல்வேண்டும். சரித்திரம் ஆராய்ச்சியுடன் கற்கவேண்டிய ஒருபாடம். இப்பாடத்திலே தேர்ச்சிபெறற்குப் பலநூல்களை வாசிக்கவேண்டும். இலங்கைச் சரித்திரத்தைப் போர்த்துக்கீசர்காலம், ஒல்லாந்தர்காலம், பிரிட்டிஷார்காலம்என முப்பெரும்பிரிவுகளில் அடக்கலாம். இந்த விதியைப்பின்பற்றி ஆசிரியர் F. X. C. நடராசா அவர்கள் ஒல்லாந்தர்காலத்தைப்பற்றி எழுதியுள்ளார். இந்நூல் தமிழுலகால் நன்குஅபிமானிக்கப்படும், என்பதற்கு எட்டுணையும் ஐயமில்லை. விலையில்குறைந்து விளக்கத்திற் சிறந்து விளங்கும் இந்நூலை மாணவர்மாத்திரமன்றிச் சரித்திரஆராய்ச்சியில் விருப்புடைய ஏனையோரும் விரும்பி வரவேற்பார்கள். ஆசிரியர்அவர்கள் நீண்டகால சேவையின்கண்ணே இந்நூலை வரைந்துள்ளார். விளக்கப்படங்கள் ஆங்காங்கே காணப்படுவது நூலிற்குத் தனிச்சிறப்பை ஊட்டுகின்றது. பார்வைக்கும் மிகஅழகான காட்சியளிக்கின்றது. ஆசிரியர்அவர்கள் ஏற்கனவே போர்த்துக்கீசர்காலத்தை எழுதி எல்லோரினதும் நன்மதிப்பைப்பெற்றுவிட்டார். மேலும் தொடர்ச்சியாக ஆசிரியவர்கள் பலசரித்திர நூல்களை எழுதித் தமிழ்நாட்டிற்கு அளிப்பார் என எதிர்பார்க்கிறேம். எமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகிறேம்.

---

● இந்தோனேஷியாவிலே ஜனுதிபதி சுகார்னே அவர்கள் சென்ற13-ந்திகதி புதன்கிழமை வத்திக்கான்அரண்மனையில் பரிசுத்தபாப்பரசரைப் பேட்டிகண்டு அவருடன் இருபதுநிமிஷங்கள்வரை சம்பாஷித்தாரென வத்திக்கானிலிருந்து தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. பேட்டியின்போது பரிசுத்தபிதா அவருக்குக் கே. ஜி. சி. பட்டம் சன்மானிக்கலாயினர்.

● தென்னுபிரிக்காவிலே பலவிதமான நோய்கொண்டவர்களின் உடலில் மனிதஇரத்தம் ஏற்றும்விஷயமாய் வருங்காலத்தில் ஐரோப்பியர்களின் இரத்தமும், அவர்கள் அல்லாதாரின் இரத்தமும் அவற்றைத்தயாரிக்கும்படியிலே பிரித்து வைக்கப்படவேண்டுமெனப் புதியசட்டங்கள் சித்தஞ்செய்யப்பட்டுவருவதாக 'ஸ்ரூர்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

● கிழக்குப் பாகிஸ்தானைச்சேர்ந்த டக்காநகரிலே பிலடெல்பியாவின் வைத்தியமிஷன் கன்னியாஸ்திரிமார் "திருக்குடும்ப ஆஸ்பத்திரி"எனும் நாமத்துடன் ஓர்புதியஆஸ்பத்திரியைத் திறந்திருக்கின்றார்கள். சமீபத்திலே இதன்திறப்புவிழாவின்போது, இந்தக் கன்னியாஸ்திரிமார்சபையை அடியிட்டவரும், அதன்முதலாவது சிரேஷ்டதாயாருமான சங். மதர்அன்னு டென்ஜெல்அவர்களும் சமுகமாயிருந்தார். கிழக்குப்பாகிஸ்தானின் கவர்னர் அதற்குத் தலைமைவகித்தார்.

## அறிவுச் சுடர்

❋ பரிசுத்தபாப்பரசர் தம்முடைய 80-வதுபிறந்தபெருநாளையும், தமது மகுடதாரண 17-வதுநிறைவுவிழாவையும் சமீபத்திலே கொண்டாடியபோது, அமெரிக்கஜனுதிபதி ஜெனறல்ஐஸன்காவர்அவர்கள் தமதுசொந்தப் பிரதிநிதிஒருவரை அனுப்பிவைத்தாரா?

ஆம், கலிபோணியாவைச் சேர்ந்த திரு. ஜோண் ஏ. மைக்கோன் எனப் பெயரிய கத்தோலிக்கபிரமுகரைத் தமதுசொந்தப் பிரதிநிதியாக அனுப்பிவைத்தார். அவர் விழாவின்போது வத்திக்கான் மாளிகைசென்று பரிசுத்தபிதாவின் பிரத்தியேகபேட்டி பெற்றுக்கொண்டபோது, ஜனுதிபதிஎழுதிக் கொடுத்த கடிதத்தை அவரிடம் கையளித்தார். பாப்பரசரும் பதிற்கடிதம் ஒன்றுஎழுதி அவர்மூலம் அனுப்பிவைத்தார். பிரதிநிதிக்கும் அர்ச். சில்வேஸ்தரின் மகிமைவரிசைக்குரிய மகிமைவாய்ந்த சிலுவைவிருதைச் சன்மானித்தார்.

❋ இந்தியாவின் மிகப்பெரிய ஆசனக்கோவில் எது?

திரிச்சூரிலுள்ள பரிசுத்தவியாகுல மாதாவின் ஆசனக்கோவிலேயாகும். 1929-ம் ஆண்டு மார்கழி 21-ந் தேதியன்று இது மகாவந்.பிரான்சீஸ் வழப்பில்லி மேற்றிராணியாரால் அத்திவாரக்கல் இடப்பெற்று, லத்தீன்சிலுவை வடிவமாகக் கட்டப்பட்டுள்ளது. 390 அடிநீளமும், 60அடி அகலமுமுடைய இந்தக்கோவிலின்கட்டுக்கோப்புகிழக்கிலிருந்து மேற்குமுகமாய் அமைந்துள்ளது. இதன் குறுக்குப்புசங்கள் 180 அடிநீளமும், 60 அடி அகலமுமுடையனவாய் வடக்கிலிருந்து கிழக்குமுகமாக அமைந்திருக்கின்றன. இது மொத்தமாக 25,000 சதுரஅடி விஸ்தீரணமுடையது. 1940-ம் ஆண்டு கார்த்திகை 29-ந் திகதியன்று இதன் பிரதமபலிபீடம் அதன் தற்போதைய மேற்றிராணியாரால் அபிஷேகஞ்செய்யப்படலாயிற்று.

❋ திரிச்சூர் ஆசனக்கோவிலுடன் ஒப்புநோக்குமிடத்து உலகில் மிகப்பிரமாண்டமானவைகளாய்க் காட்சியளிக்கும் ஆலயங்கள்எவை?

(1) ரோமாபுரியிலுள்ள அர்ச். பேதுருவானவர் மகாலயம். இதுவே உலகில் மிகப்பிரமாண்டமானது. இது 1,63,182 சதுரஅடி விஸ்தீரணமுள்ளது. திரிச்சூர் ஆசனக்கோவிலைவிட ஆறுமடங்குக்குமேல் பெரியது. (2) மிலான்நகர் ஆசனக்கோவில். இது 90,482 சதுரஅடி விஸ்தீரணமுடையது. (3) லண்டன் நகரிலுள்ள சென் போல் அங்கிளிக்கன்சபை ஆசனக்கோவில் 74,163 சதுரஅடியும், கொன்ஸ்தாந்திநோப்பிள் நகரிலுள்ள சென் சோபியா ஆசனக்கோவில் (தற்சமையம் இது ஓர் முஸ்லீம் பள்ளிவாசல்) 74,168 சதுரஅடியும், கொலோன்நகர் ஆசனக்கோவில் 66,370சதுரஅடியும், லண்டன்நகர் வெஸ்ற்மினிஸ்றர் கத்தோலிக்க ஆசனக்கோவில் 54,000 சதுரஅடியும், அன்ற்வேப்நகர நொட்றேடாம் ஆலயம் 53,454 அடியும் விஸ்தீரணமுடையன.

## எலுமிச்சம் பழம்

எலுமிச்சம்பழம் எங்கள்நாட்டில் ஒவ்வோர்காலத்தில் அதிகமாகக் கிடைக்கக்கூடிய ஒருபழம். இந்தப் பழத்திலிருந்து ஒருவகையானஉப்பை ஆக்கிக்கொள்வதுண்டு. இந்தியாவிலுள்ள எலுமிச்சம்பழங்கள் உருவத்தில் மிகப்பெரியன.

எலுமிச்சம்பழம் பித்தத்தைப்போக்கும். மக்களின்உடம்பிலுள்ள நச்சுத்தன்மையைநீக்கி நரம்புகளுக்குப் பலத்தைத்தரும். சயம்என்னும் நோயை நீக்கும். காட்டுக்காய்ச்சல்என்ற கொடிய காய்ச்சலுக்கு எலுமிச்சம் பழச்சாறு மிகவும் நல்லமருந்தாகும். ஊறுகாய் உணவை நன்குசெரிக்கச் செய்யும்.

எலுமிச்சம்பழத்தை ஊறுகாயாகச் செய்து ஆறுமாதங்கள்வரை சாடியுடன் நிலத்துள் புதைத்துவைத்து, அதன் பின்எடுத்து உணவுடன்சேர்த்துண்டால், உடம்பிற்கு அதிகநலன்களைத்தரும்.

சுவாமிவிவேகானந்தர், இராமகிருஷ்ணர் முதலியோர் எலுமிச்சம்பழ ஊறுகாயைப்பற்றி விரிவாகக் கூறியுள்ளார்கள். அதிகாலையிலே பழஞ்சோற்றுடன், வேறுஎவ்விதமான கறிவகையுஞ் சேர்க்காது ஊறுகாயைமாத்திரம் பிசைந்துஉண்டுவரின், உடம்பிற்குப் பலவிதமான நன்மைகள் உண்டாகுமென்று "விவேகானந்த விஜயம்" என்றநூலிற் கூறப்பட்டிருக்கின்றது.

இக்காலத்திற் பரவிவரும் குருதியோட்டக்கூடுதலானது (Blood Pressure) குறைவதற்கு ஆறுமாதகாலம்வரை அவிந்தஊறுகாய் மிகவும்நல்ல மருந்தாகுமென்று மருத்துவஅறிஞர் பலர் கூறுகின்றனர்.

குழந்தைகளுக்கு உண்டாகும் எலும்புருக்கிநோய்க்கு ஒருஅண்டாவில் ஆறுபடிவெந்நீர்விட்டு (குழந்தை தாங்கத்தக்க மெல்லிய சூடிருக்கும்போது) அதில் ஒருஎலுமிச்சம்பழத்தைப் பிழிந்துஊற்றிக் குழந்தையை அரைமணிவரை வெந்நீருள் காலைமாலை வைத்திருத்தல் வேண்டும். இப்படி ஒருமாதம்வரை செய்துவந்தால்.எலும்புருக்கிநோய் முற்றுகநீங்கிவிடும்.

இன்னும் எலுமிச்சம்பழச் சாற்றினுல் நீங்கத்தக்க சிலநோய்களைத் தொகுத்துக்கூறுவாம். முகப்பருவுக்கு எலுமிச்சம்பழச்சாற்றைப் பூசிக்கொண்டுவந்தால் நலமாகும். நச்சுக்கடிகளுக்குச் சாற்றை உட்கொள்வதுடன் உடம்பிற்பூசிவரின் நன்மையாகும். சுவாசகாசம், பித்தமயக்கம் இவைகளுக்குச் சாற்றை உட்கொள்ளுதல்வேண்டும். மலச்சிக்கலுக்கு எலுமிச்சம்பழச்சாற்றை ஐந்துநாள்வரை உட்கொண்டுவந்தால் நலமாகும்.

குடல்பெயர்தல், மேகநோய், மூக்கடைப்பு, நீர்க்கோவை, இருமல், ஊதுகாமாலை, சொண்டு (சொடுகு), சோகை, குன்மம், வெப்புநோய்கள், வயிற்றுக்கோளாறுகள், இருதயம்துடித்தல், தலைவலிமுதலிய நோய்களுக்கு எலுமிச்சம்பழச்சாறும், ஊறுகாயும் ஏற்றமருந்தென்று வைத்திய அறிஞர்பலர் கூறியிருக்கிறார்கள்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, June 21-1956.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அண்ணு சொல்வது:

அருமைச் சகோதரங்களே!

அருளும் அஞ்செலாவும் சகோதரங்கள். அன்று அவர்களுடையதாய் தனது வெள்ளைச்சேலையைத்துவைத்து, வெய்யிலில் உலர்வதற்காக வெளியில் கட்டிவிட்டாள். அருளும் அஞ்செலாவும் விளையாட்டாக மண்கட்டிகளை அச்சேலையில் எறிந்தார்கள். அவர்கள் எறிந்தது செம்மண்கட்டிகள். அவை நனைந்திருந்த சேலையிற்பட, அது செம்புள்ளி நிறைந்து அழுக்காகி விட்டது.

தாய்வந்து பார்த்தாள். கோபமும் ஆத்திரமும் ஒன்ருய்வந்தாலும் அதை அடக்கிக் கொண்டாள். நல்லபாடம் படிப்பிக்க எண்ணினுள்.

அவள் பிள்ளைகளைத் தன் அருகே அழைத்தாள். மக்காள், நான் துவைத்து உலரவிட்ட சேலையைப்போலத்தான் ஞானஸ்நானம் பெற்றபின் உங்கள் ஆத்துமமிருக்கும். எமது சரீரத்தின் மறைவான, பரிசுத்தமான உறுப்புகளைப்பற்றி ஊத்தைக் கதைகள் பேசுகிறவர்கள், சருவேசுரன் உண்டாக்கிய தூயதுப்புரவானவைகளில் சேறுபூசுகிருர்கள். அப்படிப்பட்டவர்களுடன் உங்களுக்குச் சகவாசமே வேண்டாம்.

வேறுசிலர் ஊத்தைப்படங்களைக் காட்டுவார்கள்: கெட்டபடம்பார்க்க அழைப்பார்கள். இன்னுஞ்சிலர் அசுத்தகிரிகைகளைச் செய்யவும் அழைப்பார்கள். மக்களே! இவர்கள் "ஒளியின் மக்களல்ல", "இருளின் மக்கள்." அவர்கள் உங்களை இருளில் அமிழ்த்துவார்கள். "உங்கள் அம்மாவின் முன்னிலையில் நீங்கள் பேசவோ செய்யவோ மாட்டாத எதையும் வேறெங்காவது பேசவோ செய்யவோ வேண்டாம்," என்று புத்தி கூறினுள். அது நல்லபாடமல்லவா?

உங்கள் அன்புள்ள,

அண்ணு.

---

## உண்மை அழகு

தற்காலம் அழகு இராணிப்போட்டி மிகுந்த காலம். எந்தக்களியாட்டு விழாவிலும் அழகுஇராணிப் போட்டி இல்லாதுபோவதில்லை. இந்நிலையில் சினிமா நட்சத்திரமான அனிற்ரு கொல்பி கூறுவது கவனிக்கற்பாலது.

சருவேசுரன் எமக்குத் தந்த சரீரத்தைத் துப்புரவாயும் நல்நிலைமையிலும் வைத்திருப்பது எமது கடமை. ஆனல், சரீர அழகு தனித்துநில்லாது.

"நாம் எப்படிப்பட்டவர்களென்று நம் கண்கள் காட்டும். எங்கள் எண்ணங்களை, உணர்ச்சிகளை, ஆசைகளை எம்முடையமுகம் பிரதிபிம்பிக்கும். கற்பு, தாழ்மை, தேவநேசம், பிறர்சிநேகம் முதலிய புண்ணியங்கள் எம்மில் பிரதிபிம்பிக்கப்படுவதே உண்மைஅழகு."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் கற்பித்த பாடம்

அருளானந்தம் ஒரு பெரியபண்டிதர். தொம்மையப்பர் கல்லூரியில் தொண்டாற்றிவந்தார். அக்கல்லூரியில் தொண்டாற்றிய ஆசிரியர்களுள் இவரே வயதில் மூத்தவரும், அனுபவத்தில் பழுத்தவருமாய் விளங்கினர்.

பாடந்தொடங்குவதற்கு மணிஅடித்தது. பாடசாலைச் சிறுவர் விளையாட்டை நிறுத்தி வகுப்பறையுட் புகுந்தனர். ஜோர்ஜ் முதல்வரியிலுள்ள வாங்கில் தனது நண்பன் ஜோணின் பக்கத்தில் உட்கார்ந்தான். பண்டிதர் அருளானந்தம் வகுப்பறைக்குட் சென்று தமது நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, "இன்று என்ன நடத்த வேண்டும். குறளா, நாலடியாரா, மணிமேகலையா ?" என்று வினவினர். நேற்று நாலடியார் முடிந்துவிட்டது ; இன்று குறளடியார் ஸார்" என்ருன் பண்டிதரின் மகன் ஜோர்ஜ்.

வகுப்பு மாணவர் யாவரும் கொல் என்று சிரித்தனர். ஒருபக்கம் தன் மகனுடைய குறும்பைகுறித்து ஆத்திரப்பட்டாலும் தான்பெற்ற ஒரேசெல்வம் என்ற காரணத்தினல் உதட்டை மடக்கி முகத்தைச் சுருக்கிப் பேசாமல் இருந்தார். பின்பு குறட் புத்தகத்தை எடுத்து ஒரு குறளைப்படித்தார்.

"மிகுதியால் மிக்கவை செய்தாரை
தாம் தம் தகுதியால் வென்றுவிடல்"

முகத்தை உயர்த்தித் தன் மகனையே அதற்குப் பதவுரைகூறும்படி கேட்டார். எழுந்துநின்ற அவனுக்கு விடையளிக்க முடியவில்லை. தமிழ்ஞானம் துளிகூடத் தன் மகனுக்கு இல்லை என்று வருத்தப்பட்டார். அதற்கெல்லாம்காரணம் தான் அளித்துவரும் சலுகைதான் என்பதை உணர்ந்து கொண்டார். அடுத்த மாணவனை ஜோணை நோக்கினர். அவன் பணிவுடன் எழுந்துநின்று வில்லிலிருந்து பாயும் அம்பைப்போலக் கணீரென்றகுரலில் மடமடவென்று விடை கூறிமுடித்தான்.

அருளானந்தம் திகைத்துப்போனர். இத்தனைக்கும் ஜோண் பரமஏழை. ஒரு வேளைச் சாப்பாட்டுக்கே திண்டாட்டம். வறுமையும் அறிவும் நெருங்கிய நண்பர்கள். இதை அவர் அறியாதவரல்ல. ஜோணின் திறமையை அவர் வாய்விட்டுப் பாராட்டினர். ஆனல், இதயத்தின் ஒரு மூலையில் பொருமையின் நிழலாட்டத்தைக் கண்டார். "ஜோண், நன்ருகச் சொல்லிவிட்டாய் இன்னும் நன்ருகப்படி" என்று வாழ்த்தினலும் அவருடைய உள்ளம் துடித்தது. பையன்கள் இருவரும் உட்கார்ந்தனர்.

அன்று பள்ளிக்கூடச் சம்பளம்கட்டி முடிக்கும்நாள். "எல்லாரும் காசுகட்டிவிட்டீர்களா ? கட்டாதவர்கள் எழுந்து நில்லுங்கள்" என்று உரக்கக் கூறினர் அருளானந்தம் எல்லாரும் அமைதியாயிருந்தனர். ஜோண்மட்டும் எழுந்து நின்ருன். ஜோண், ஏன் இன்னும் காசு கட்டவில்லை. என்றுசீறினர் அருளானந்தம். "ஸார், பணம் எங்கும் கிடைக்கவில்லை. நாளைக்கு எப்படியாகிலும கட்டிவிடுகிறேன்" என்ருன் பையன்.

அதிகமாக ஜோண் சம்பளப்பணத்தைக் குறித்தநாளிற் கட்டமாட்டான். அருளானந்தம்தான் அவனுக்குப்பதிலாகப் பணத்தைக் கட்டிவிட்டுப் பின் அவனிடம்பெற்றுக் கொள்ளுவார். ஆனல், இன்று அவர் இதயத்தில் வீசிய பொருமையால் ஜோண் எவ்வித கண்ணீருடன் இரந்து கேட்டும் அவர் இரங்கியவரல்ல.

இரண்டு மூன்று முறையல்லப் பல முறை பணிவுடன் கண்ணீர் சொரிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு ஒரு நாளைக்கு மட்டும் பொறுத்து, மறுநாட்பணங்கட்டுவதாகக் கேட்டான். ஆனால், அவனின் மன்றாட்டமும் கண்ணீரும் புறக்குடத்திலூற்றிய நீர்போலாயிற்று.

தமிழ்ப் பாடம்முடிந்து விட்டதற்கான மணியும் ஒலித்தது. அருளானந்தம் எழுந்து சென்று விட்டார். மறுநாள் ஜோணுக்கு ஓர் செய்திகிடைத்தது. அது சந்தோஷமான செய்தியல்ல. பள்ளிக்கூடப்பணம் கட்டாததினால் அன்றுடன் ஜோணின் பெயர் டாப்பிலிருந்து எடுக்கப்பட்டதென்ற துக்கமான செய்தியே. வறுமையின் கொடுமை மனதைவாட்ட ஜோண் பாடசாலைக்குப் போவதை நிறுத்தி விட்டான்.

ஜோண் பாடசாலையிலிருந்து நீக்கப்பட்டதையிட்டு அருளானந்தம் அகமிக மகிழ்ந்தார். ஆனால், தன் மகனைவிடக் கெட்டிக்காரன் என்ற காரணத்தினால் அவன்மீது கொண்ட பொறாமையை அவருடைய மனச்சாட்சி எத்தனையோ முறை கண்டித்திருக்கிறது. சிலசமயம் அது அவரை வாட்டும். அற்பவிஷயம்; அதிலே பொறாமை; மனஉலைச்சல்! அவருக்கே வியப்பாக இருந்தது.

காலச்சக்கரம் உருண்டது, பன்னிரண்டுமுறை. ஆம். பன்னிரண்டு வருஷங்கள் கழிந்தன. அருளானந்தத்தின் உடலில் முதுமையின் சின்னங்கள் படிந்தன. ஆனால், அவர் எண்ணியபடி ஜோர்ஜ் முதலிடம் பெறவில்லை. எவ்வளவோ சிரமத்தின்பின் எஸ். எஸ். சி. வகுப்பிற் சித்திஎய்தி வேலையின்றித் திரிந்தான்.

அருளானந்தம் சேர்த்துவைத்த பணம் முழுவதும் மகனின் ஆடம்பர சீவியத்தில் முடிந்தன. வேலைக்காக எத்தனையோ இடங்களிற் கேட்டும் ஒரு இடத்திலிருந்தாவது ஒரு பதிலும் வரவில்லை.

திருச்சியில் ஒரு வேலையிருக்கிறதென்று அறிந்து அந்த தந்தையும் மகனும் சென்றனர். தேர்தல் பரீட்சை நடந்தது. அந்தவேலையிற் சேருவதற்காக ஆயிரம்பேர் பரீட்சைக்கு சமுகம்அளித்தனர். பரீட்சை முடிந்தது. ஜோர்ஜ் தெரியப்படவில்லை. தந்தையும் மகனும மிகக் கவலையுடன் திரும்பினர்.

வெயில் அகோரத்தால் தாகம்அவர்களை வாட்டியது. தாகத்தைத் தீர்த்துக் கொள்ளும்படி "அஞ்சுகஐஸ்கடை" என்று கொட்டை எழுத்துக்களால் எழுதப்பட்டிருந்த கடைக்குட் புகுந்தனர். இரண்டு கோப்பை பானத்திற்குக் கூறிய அருளானந்தம் பெருமூச்சு விட்டுக் கொண்டு நாற்காலியிருந்தார்.

குளிர்ந்த இனிப்பான பானம் இரண்டு வந்தன. இருவரும் பருகினர். அரை ரூபா என்று எழுதப்பட்ட சீட்டொன்றைக் கொண்டுவந்து ஒருவன் அவரிடம் கொடுத்தான். அருளானந்தம் சீட்டையும் பணத்தையும் முதலாளியிடம் கொடுத்தார். "சீட்டு மட்டும் தந்தாற்போதும், பணத்தை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்" என்று கூறினர் முதலாளி. அருளானந்தம் திடுக்கிட்டார். 'பணம் வேண்டாம்என்ற முதலாளி யார்? எவ்விதம் இவர் பணம் வாங்காமற் கடைநடத்துகிறார். அதனாற்தான் இக்கடை இவ்வளவு புகழுடன் இருக்கிறதா" என்று வியப்புடன் முதலாளியை உற்று நோக்கினர்.

"என்ன ஸார்! என்னை அடையாளம் தெரியவில்லையா? தங்கள் பழையமாணவன் ஜோண்" என்ற அந்தக்குரல் இப்பொழுது அவர் கண்களை அகலவிரித்தது.

அருளானந்தத்திற்குப் பேசமுடியவில்லை. பழைய நினைவுகள் போட்டிபோட்டுக் கொண்டு கிறிக்கிளம்பின. "வாருங்கள், மாடிக்குச் சென்று தனியாகப் பேசுவோம்" என்று கூறி இருவரையும் அழைத்துச் சென்றான், ஜோண்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அறத்தால் வருவதே இன்பம்"

ஒரு கவளம் சோற்றுக்குத் தெருத் தெருவாக அலைந்து கொண்டிருந்த பாக்கியநாதன் ஒரு காலத்தில் செல்வத்தின் உச்சநிலையில் மனைவிமக்களுடன் இன்பமாய்க் காலம் கழித்தான். "சுகதுக்கம் சுழல்சக்கரம்" என்பதற்கொப்ப அவனது திரண்ட ஆஸ்தி — மனைவி — மூன்று ஆண்குழந்தைகள் அனைத்தையும் இழந்து தன் ஏக செல்வ மகள் சொர்ணத்துடன் வாழ்ந்துவந்தான்.

வாழ்க்கையில் வெறுத்துப்போன அவன் பலஇடங்களிலும் வேலைதேடியும் கிடைக்கவில்லை. இறுதியாகப் பிச்சையெடுக்கும் தொழிலே அவனுக்கு நிலைத்து விட்டது. எனினும், வறுமைப் பேயுடன் போராடஆற்றாத பாக்கியநாதன் சிலநாட்களில் தன்மனைவி மக்கள் சென்றவழியே போய்விட்டான். தந்தையை இழந்த சொர்ணம் கதறினாள், பதறினாள், கூச்சலிட்டாள். வேறு என்ன செய்யமுடியும், தந்தையின் தொழிலையே மேற்கொண்டு கால்வயிறும் அரைவயிறுமாகப் பொழுதுபோக்கினாள் சொர்ணம். ஆனால், ஈகைக் குணத்தை மட்டும் விடவில்லை.

ஒருநாள் வழக்கம்போல் பிச்சையெடுக்கச்சென்ற சொர்ணம் ஒருபெரிய பங்களாவின் முன்நின்று பிச்சைகேட்டாள். அதேசமயம் அந்தப் பங்களாவின் வேலைக்காரிமகன் "அம்மா! புத்தகம் இல்லாமல் போனால் உபாத்தியார் அடிப்பார். புத்தகம் வாங்கக் காசு தாருங்கள்" என்று தாயைத்தொந்தரவு செய்தான். கூலிவேலைசெய்து தாயும் மகனுமாக வயிறுவளர்த்த அவளுக்கு மகன் கேட்கும்போதெல்லாம் காசு கொடுக்க எங்கேபோவாள்? எனவே, கோபமும் வருத்தமும் ஒன்றுசேர மகனின் கன்னத்தில் பளீர்என்று ஓர் அடியைப் போட்டுவிட்டு அவனைவெளியே தள்ளினாள். இதைப் பார்த்திருந்த பிச்சைக்காரச் சொர்ணம்: "அம்மா! சிறுவனை அடியாதேயுங்கள். நான் பணம் கொடுக்கிறேன். அவன் தனக்குவேண்டிய புத்தகங்களை வாங்கிக்கொள்ளட்டும்" என்று தன்னிடமிருந்த சில்லறைகளைக் கொடுத்தாள். பிச்சைக்காரச் சிறுமியின் தாராள குணத்தைப் பங்களாவின் தலைவி மங்களம் அவதானித்தாள். விரைந்துசென்று சொர்ணத்தை அழைத்து: "மகளே! இன்று தொட்டு நீ என் மகள். இனிப் பிச்சை வாங்க வேண்டியதில்லை" என்று கனிவுடன் கூறித் தன் பங்களாவுக்குள் இட்டுச்சென்று புத்தாடை அணிவித்துத் தன் ஏககுமாரன் சேவியருடன் தன் புதல்வியாகவே வளர்த்துவந்தாள்.

— மேரிதெரேஸ் அனக்கிளீற்று.

---

## —: விகடம் :—

கந்தன்:— அயல் வீட்டுக்காரனின் நாய் உன்னைக் கடித்தது அல்லவா? அதற்காகக் கோட்டில் நடவடிக்கை எடுத்துக்கொண்டாயே ஏதும் நஷ்டபரிகாரம் கிடைத்ததா?

கணபதி:— அதுதான் இல்லையே. அவன் ஏற்படுத்தியிருந்த வழக்கறிஞர் பலே கெட்டிக்காரர். அவர் நான்தான் அவனுடைய நாயைக் கடித்ததாகப் 'புறூவ்' பண்ணிவிட்டார். அதனால் வழக்குப் பறந்துபோய் விட்டது.

* * *

மாமி:— வேவி! பாடசாலையிலே உபாத்தியாயர் கேட்குங்கேள்விகள் உனக்கு மயக்கமாய் இருக்கின்றனவா?

வேவி:— கேள்விகள் அப்படி இல்லை மாமி. ஆனால், மறுமொழிகள்தான் மயக்கமாய் இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org